

Tamil Comics Ulagam - King Viswa



டெக்ஸ் வில்லர் தோன்றும்
பழி வாங்கும் பாலை
ஜூலை மாதத்தில் ஒரு நாள்— தென் மேற்கு கொலராடோவில் மாக் எல்மோ நீருற்றுகளின் அருகே,... மாலை வேளையில்—
அதோ... வருகிருர்கள்!
கண்காணிப்பு குழுவினர் கொடுத்த தகவல் சரியானது தானா என்று இப்போது தெரிந்து விடும்...
இன்னமும் அவர்களை நீங்கள் முழுமையாக நம்பவில்லையா... கர்னல்?
விஷப்பாம்புகளிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்வதுதான் விவேகம்— செவ்விந்தியனை ஒருபோதும் நம்பக்கூடாது!



ஒற்றர்கள் தகவல் கொண்டு வந்திருக்கிறோம்... கர்னல்
வெட்டிப் பேச்சு வேண்டாம்— நேராக விஷயத்திற்கு வா....!
இனம் மொத்தமும் அங்கே இருக்கிறது— சுமார் ஆயிரம் வீரர்கள் மற்றும் பெண்டிர், குழந்தைகள்...
நல்லது...!
கடைசி நிமிட உத்தரவுகளை பெற இரவு உணவுக்குப் பின் என் கூடாரத்துக்கு வாருங்கள் — இப்போது நீங்கள் போகலாம்.
அப்படியே செய்கிறோம்... 'கர்னல்'
அதிரடி தாக்குதல்தான் அதிக நாசத்தை விளைவிக்கும்— நீண்ட காலத்துக்கு அவர்களுடைய நினைவில் நிலைத்து நிற்கும்
?
அவர்களை தாக்க உத்தேசித்திருக்கிறீர்களா... என்ன?
வேறென்ன செய்ய வேண்டுமென்கிறாய்?




★ யுடே-செவ்விந்தியப் பழங்குடிகளில் ஒன்று


வெள்ளையர்களின் பண்ணைகள் மீதும், வியாபாரப் பயணிகள் மீதும் திடீர் தாக்குதல்களை நடத்திய கலகக் கும்பல் எங்கே போய் பதுங்கிக் கொண்டு விட்டதென்று நீ நினைக்கிறாய் ப்ளாக் கிராமத்திற்குள் தான்! கொள்ளைப் பொருட்களில் ஒரு பங்கை கொடுத்து பதிலுக்கு புதிய குதிரைகளையும், ஆயுதங்களையும் பெற்றுக் கொண்டதோடு, கொஞ்சமும் அச்சமின்றி அங்கே பதுங்கிக் கிடக்கிறார்கள் ரௌடிகள்!
ஆகவேதான் முன் சோதனையும் கிடையாது— முன்னறிவிப்பும் கிடையாது...! கடந்த சில நாட்களாக இந்த பிராந்தியத்தில் தாங்கள் விளைவித்த நாசத்திற்கும்,கொண்ட உயிர் பலிகளுக்கும் கலகக்காரர்கள் உரிய விலை கொடுக்க வேண்டிய தருணம் வந்து விட்டது...காப்டன்!
விடிகாலை வேளையில் அவர்களை தாக்க உத்தேசமா...?
அதற்கும் சற்று முன்னதாக—
அவர்கள் ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் போது அதிரடிதாக்குதல் நடத்தி அனைவரையும் கொன்று அந்த கிராமத்தை தரை மட்டமாக்கி விட தீர்மானித்துள்ளேன்!
ஹூ...ம்!
மிகுந்த மரியாதையோடு தங்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது என்னவென்றால்...
...போதும் நிறுத்து— மேற்கொண்டு ஒரு வார்த்தை கூட நீ பேசக் கூடாது... காப்டன் நார்ட்டன்!


அன்றிரவே, பல கண்காணிப்புப் பிரிவுகள் முன் செல்ல, கர்னல் அர்லிங்டனின் படைப் பிரிவு தென் மேற்கு திசை நோக்கிப் பயணமாகியது...
விடிகாலே வேளைக்கும் சற்று முன்னதாக, மிகுந்த எச்சரிக்கை-யோடு பதுங்கி முன்னேறி ப்ளாக் புல்லின் கிராமத்-தினருகே இருந்த குன்றை சென்றடைந்தனர்...
வேறு உத்தரவுகள் ஏதும் உண்டா,...கர்னல்!
இல்லே...!
மீண்டும் சொல்கிறேன்... பீரங்கி தாக்குதல் நடந்து ஓய்ந்ததும் லெப்டினென்ட் முன்னணி தாக்குதலே நடத்தியவாறு கிராமத்-தினுள் புகவேண்டும்!



... ஐந்து நிமிட இடைவெளி கொடுத்து, உன்னுடைய படைபிரிவும் லெப்டினென்ட் மில்ட்டனின் படைப்பிரிவும் கிராமத்தின் வெளி வட்டத்திலிருந்தவாறு தாக்கத் தொடங்க வேண்டும்.
யெஸ் — கர்னல்!
அனைவரும் அவரவர் இலக்குக்குத் திரும்புங்கள் — இப்போதிலிருந்து சரியாக அரை மணி நேரத்திற்குப் பின் பீரங்கிகள் முழங்கத் தொடங்கும்!
அதைக் கவனித்தாயா? கிராமத் தலைவனின் குடிசையின் மேலே நமது கொடி பறந்து கொண்டிருக்கிறது —
ஆமாம்...!
ஒரு பாவமும் அறியா இந்த அப்பாவிகளை நாசம் செய்ய ஏன் தான் கர்னலுக்கு இத்தனை ஆசையோ?
சரியாக சொன்னாய்!
அரைமணி நேரம் கழித்து —
...ம் — சுடுங்கள்...!



மறுகணம்—
பூம்!
நிசப்தமாயிருந்த கிராமத்தில்...
டமால்!
?!
ஆண்டவனே! பீரங்கிகள் இடி முழக்கம் செய்கின்றன...!
டுமீல்!


ம்... குதிரையில் ஏறி கிளம்புங்கள்— தாக்குவதற்கு! ரைபிள்களை பயன்படுத்தி ஓய்ந்தபின் கத்தியை கையிலெடுத்துக் கொள்ளுங்கள்!
டமீல்!
விசேஷப்படையினர் எல்லோரையும் உஷார்படுத்து!
ஆ!
ஆ!
இது என்ன கொடுமை? படு பயங்கரமான தவறை செய்கிறார்கள்!


சுடாதீர்கள்! சுடாதீர்கள்!
டூம்!
அட... சைத்தான்களே! உங்கள் வார்த்தைகளுக்கு நீங்கள் தரும் மதிப்பு இவ்வளவுதானா?
கடைசி முறையாக் பீரங்கியை இயக்கி விட்டு அவர்களுக்கு சமிக்ஞை கொடுங்கள்
டுமீல்...
11



டமால்!
ஆ...!
டாட்! டாட்!
அதோ சமிக்ஞை! ம்... பாய்ந்து முன்னேறிச் சென்று தாக்குங்கள்!
தாக்குங்கள் !!!
வீரர்களே... புறப்படுங்கள்! யாயாயாஹீஹீசசு...!
ப்ளாக் புல்! நாம் குதிரைகளில் ஏறி வெளியேறி விடலாம்!
யாயாஹீசசு...!
12


கூடாது! வெள்ளையர்கள் இதற்குள் கிராமத்தை சுற்றி வளைத்துக்கொண்டு வெளியேறும் பாதைகளை அடைத்து விட்டிருக்கக்கூடும்! நாம் இங்கிருந்தே போராடுவோம்! செத்து மடிவதானாலும் போரிட்டே மடிவோம்!
உஷார்...! அதோ... வருகிறார்கள்—
சுடுங்கள்!
டுமீல்... டுமீல்... டுமீல்...
ஆ...!
ஆ...!
டுமீல்...
13


முமீல்...
முமீல்...
வெள்ளை நாய்கள்!... முது கெலும்
பில்லாத கோழைகள்!
ஆவ்...!
முமீல்!
ஐயோ..!
ஆ
வாருங்கள்... குதிரையிலேறி
சென்று விடலாம்!
நீ போ... சீக்கிரம்!
ஊஹூம்... நீங்கள் வராமல் நான்
மட்டும் போக மாட்டேன்!
முமீல்!
முமீல்...
பிடிவாதம் செய்யாதே...
போய்விடு— நம் மகனின்
எதிர்காலத்தை எண்ணி-
யாவது— ஹா ஆஆ!


யாயா ஹா ஹா......!
ஓடு நஷியா— உன்னை காப்பாற்றிக் கொள்...!
வெள்ளை சைத்தானே...!
சிவப்பு சனியனே! உன்னையும் நான் தீர்த்துக் கட்டாமல் விடப்போவதில்லை — ஆஆஆ ....!
இரண்டாவது பிரிவு— முன்னேறுங்கள்!
மூன்றாவது பிரிவு— முன்னேறுங்கள்!



உதவி...!
ஐயோ...!
ஆஆ...!
சுடுங்கள்!
தேவதைகளின் அருளோடு நான் மட்டும் பத்திரமாக என் தந்தையின் இருப்பிடத்துக்குச் சென்றடைய முடிந்து விட்டால் இந்த வெறிச்செயலுக்கு என்றாவது ஒருநாள் நான் பழிதீர்க்காமல் விட மாட்டேன்— இது சத்தியம்...!
பேய்கள்..! பிசாசுகள்!



டமீல்.. டமீல்... டமீல்
ஹீ...!
ஆ... ஐயோ!
டாங்!
ப்ளாங்கோ— என் கணவரின் குதிரை!


ப்ளாங்கோ!
ப்ளாங்கோ!
யாயா ஹிஹி ...!
ப்ளாங்கோ!
மிஞ்சி நிற்கும் குடிசைகளை
தீயிட்டு கொளுத்துங்கள்!
ஆ...!
யாயா ஹிஹிச...—
பிடி ஓட்டம்!


ஹே... அங்கே கவனி!
தப்பவிட்டு விடக்கூடாது...!
டுமீல்...டுமீல்..
சர்ர்ச்...!
சர்ர்ர்...!
யாரும் தப்பிச் சென்று விட்டால் நம் பாடு ஆபத்தாகிவிடும்— வாருங்கள்... துரத்திச் செல்வோம்!
ஓடு ப்ளாங்கோ...! ம்— இன்னும் வேகமாக!
டுமீல்...டுமீல்..
டுமீல்...டுமீல்..


ஹூம்... நேரத்தையும் தோட்டாக்களையும் வீணடிக்கிறோம் என்று தோன்றுகிறது! புயல் வேகத்தில் செல்லும் அந்தக் குதிரையை விரட்டிப் பிடிக்க யாராலும் முடியாது!
இருபது நிமிடங்களுக்குப் பின்...
வேறு யாரும் இல்லையே!
யாரும் மிச்சமில்லை... கர்னல்!
நீங்கள் அனுமதித்தால் இவர்களை கைதிகளாக நடத்தலாம்... கர்னல்! எனவே...
நல்லது...! இவர்களை நம்மோடு இழுத்துச் செல்வது வீண் வேலை என்று படுகிறது எனக்கு! ஆனால்...
மூடு வாயை! எனக்கு யோசனை சொல்ல வேண்டாம்!


ஓ...கே காப்டன்! ஒரு சிறு படைப் பிரிவினருக்கு இவர்களை கோட்டைக்கு வழி நடத்திச் செல்ல உத்தரவு கொடு!
!!
உத்தரவு...!!
சில நிமிடங்களுக்கு மீந்து நின்ற அப்பாவி ஜனங்களை சுட்டுத் தள்ளுவதா விட்டு விடுவதா என்று தீர்மானிக்க முடியாமல் தடுமாறிய கர்னல் இறுதியில் வேண்டா வெறுப்பாக சுடும் யோசனையை கைவிட்டார்...
அதே நாளில், சுமார் இரண்டு மணி நேரம் கழித்து—
ப்ளாக் புல்லின் கிராமம் வெள்ளையர் படையால் நிர்மூலமாக்கப் பட்டிருக்கிறது
மற்றவர்களுக்கும் சமிக்ஞை அனுப்ப வேண்டும்!


அதே வேளையில் —நவஜோ கிராமத்தில்...
இது ஒரு வெறும் கனவு தானே...!
அப்படியில்லை டெக்ஸ்...! வெறும் கனவுதானே என்று இதை ஒதுக்கி விடுவதற்கில்லை!
தப்பியோட முயன்ற என் மகளை நோக்கி சிப்பாய்கள் சுடத் தொடங்கிய வேளையில் நான் விழித்துக் கொண்டேன்... ஆனாலும் தொடர்ந்து அவளுடைய குரல் எனக்கு கேட்டுக் கொண்டேயிருந்தது!
என் குடிசையிலிருந்த அனைத்து பொருட்களை-யும் என்னால் பார்க்க முடிந்தது—சிறிய சிலை—ஆவி நடனத்தின் போது நான் அணியும் முக மூடி-என் கண்ணில் பட்ட இவையனைத்தும் நான் விழித்துக் கொண்டு தானிருக்கிறேன் என்-பதை உறுதி செய்தன!
இருந்தும், உதவி கோரி என் மகள் எழுப்பிய அவலக் குரல் தொடர்ந்து என் செவியில் வந்து விழுந்து கொண்டேயிருந்தது!
புகை சமிக்ஞை!
ஹ்ம்... வேறு யாராவது இப்படி சொல்லியிருந்தால் நிச்சயம் நான் நம்பவே மாட்டேன்...!
.. ஆனால் சொல்வது நீ என்பதனால்தான்...


அதோ குன்று மேட்டி-
லிருந்து புகை சமிக்ஞை
மேலெழும்புகிறது!
வாருங்கள் நாமும் போவோம்!
?
வெள்ளையர் படை..! ப்ளாக்
புல்லின் கிராமத்தை...
...தாக்கி நிர்மூலமாக்கி
விட்டார்கள்!
என் மகள் வாழ்ந்து வந்த
கிராமம் அது!
பொறு...சமிக்ஞை தொடர்ந்து
வருகிறது— கவனி!
நஷியா... செய்தியை
கொண்டு வருகிறான்!
23



என் கனவு வெறும் கனவல்ல... ஆவிகள் எனக்கு அனுப்பிய முன்னோட்ட செய்தி!
உண்மை...! வியத்தகும் வகையில் நிரூபிக்கப்பட்ட டெலிபதி சமாசாரம்!
இனி நீ கவலைப்படதேவையில்லை! உன் மகள் உயிரோடு தானிருக்கிருள்...! இன்று மாலையிலே நாளை காலையிலோ அவள் வந்து சேரக்கூடும்!
அதே கணத்தில்—
உன் கணவரும் ப்ளாக் புல்லும் மற்றவர்களும் கொல்லப் பட்டதை கேள்விப்பட்டதும் உடனே பழி வாங்க ஒரு யுத்தத்துக்கு டெக்ஸ் வில்லர் கிளம்புவார் என்று நான் நினைக்கவில்லை!
இல்லை... நிச்சயமாக கிளம்புவார்!
டெக்ஸ் வில்லர் எனக்கு சித்தப்பா மாதிரி! மேலும் அவர் ப்ளாக் புல்லுக்கு மிக நெருங்கிய நண்பர்!
டெக்ஸ் வில்லரும் ஒரு வெள்ளையர் என்பதை மறந்து விடாதே— அந்த வெறியர்களுக்கு எதிராக ஆயுத பிரயோகம் செய்யத் துணியமாட்டார்!
உனக்கு டெக்ஸ் வில்லரைப் பற்றி சரியாக தெரியாது!


மனிதர்களின் தோல் நிறம் என்ன என்பதை அவர் கவனிப்பதில்லை... அவர்களின் மனத்தைத் தான் படித்துப் பார்ப்பார். முந்தைய சில சந்தர்ப்பங்களில் பழங்குடியினரை வெள்ளைப் பட்டாளத்திற்கு எதிராக போரிட வழி நடத்திச் சென்றிருக்கிறார்!
அன்று மாலே— அஸ்தமன வேளையில்
அதோ வருகிறார்கள்...!
ஆம்! நஷியாதான்—உடன் துணை வருவது யுடே வீரர்கள்! ஊருக்குள் சென்று செய்தியை தெரியப்படுத்து! ஓடு...!
'சரி ..!
கொஞ்ச நேரம் கழித்து—
அவர்கள் வருகிறார்கள்!
என்னதான் நடந்தது என்று சற்று நேரத்தில் விபரமாக தெரிந்து விடும்!


அதே வேளையில்... அங்கே லூயிஸ் கோட்டையில்—
என்ன தைரியம் உனக்கு!
மாட்டேன்...! இந்த அறிக்கையில் கையெழுத்திட எனக்கு இஷ்டமில்லை
நான் உன் மேலதிகாரி—
பயங்கரப் படு கொலையை ஒரு வீர சாகஸப் போர் என்பதாக திரித்துக் கூறுகிறது இந்த அறிக்கை.
அயோக்கிய ராஸ்கல்...! எதிர் வாதம் செய்யும் உன் எதிர்காலத்தை நாசம் செய்கிறேனா இல்லையா பார்!
இப்படி மறுப்பதன் மூலம் என் உத்தியோகத்துக்கு களங்கம் ஏற்படுத்தி விட முடியும் என்று மனப்பால் குடிக்கிறாயா?
...பூச்சாண்டி காட்டுகிறீர்களா...?
அப்படி ஒரு களங்கத்தை நீங்களாகவே ஏற்படுத்திக் கொண்டு விட்டீர்கள் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்... கர்னல்


போ வெளியே— போய்விடு!
...நீ அரெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறாய்!
உடன் படிக்கையில் கையெழுத்திட்ட ப்ளாக் புல் அதன்படி நமக்கு தொல்லை ஏதும் விளைவிக்காமல் தன் இனத்தாரோடு கிராமத்தில் அமைதியாக வாழ்ந்து வந்த வேளையில் அவர்களை தாக்கி அழிக்க உத்தரவிட்டார்கள்...
அதே வேளையில்—
இன்னமும் என் நெஞ்சம் வேதனையில் வெந்து கொண்டிருக்கிறது அப்பா...!
உன் கண்களால் நேரில் பார்த்தவற்றையும் காதால் கேட்டவற்றையும் இப்போது விவரமாக கூறு...
எனக்கு தெரியாதா மகளே?
நடந்ததை நினைத்துப் பார்த்தால் இப்போதும் என் நெஞ்சம் நடு நடுங்கிறது...



முன்னெச் சரிக்கை இன்று பீரங்கிகள் தூங்கிக் கொண்டிருந்த கிராமத்தை தாக்கி நாசம் செய்த அநியாயத்தையும் அதையடுத்து ஏதோ காட்டு விலங்குகளை வேட்டையாடுவது போல் கிராமவாசிகளை அவர்கள் கொன்று குவித்த அவலத்தையும் வார்த்தை தடுமாற ஒருவாறாக விவரமாக சொல்லி முடித்தாள் நஷியா.
என் கணவரின் ஜாதிக் குதிரையின் உதவி கிட்டியதால் நான் மட்டும் தப்பியோடி வர முடிந்தது. இல்லையேல் இன்னேரம் என் பிணமும் நாசமுற்ற கிராமத்தின் சிதிலங்களின் அடியில் புதையுண்டு விட்டிருக்கும்... பழிவாங்க வேண்டும் என்று ஓலமிட்டவாறு வகையேதுமின்றி என் ஆவி இந்தப் பிராந்தியத்தில் அலைந்து கொண்டிருந்திருக்கும்...
நாங்கள் எங்களுடைய கிராமத்திலிருந்து கிளம்பும்போதே அதற்கான முன்னேற்பாடுகள் தொடங்கப் பட்டு விட்டன
!
?
இந்த படுபாதக செயலுக்கு நிச்சயம் அவர்களை பழிவாங்காமல் விடப்போவதில்லை!
மற்ற பழங்குடி பிரிவினருக்கும் புகை சமிக்ஞை மூலம் செய்தி தெரிவிக்கப்பட்டு அவர்களுடைய ஆதரவும் தேடப்பட்டு வருகிறது
ஓகோ!
சகோதரரே... உங்கள் கருத்தை அறிய விரும்புகிறோம்!
28


நமக்கென்ன என்று நவஜோஸ் அலட்சியமாக இருந்து விட போகிருர்களா அல்லது உடனடி தாக்குதலுக்கு தாங்களும் சிலிர்த்தெழப் போகிருர்களா?
உங்கள் அனைவரின் நெஞ்சங்களிலும் கொந்தளிக்கும் சினத்தை என்னல் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனல் கோபமும், பராக்கிரமும், இடி முழக்கம் செய்யும் பீரங்கிகளோடும் சக்தி வாய்ந்த பல ரக துப்பாக்கிகளோடும் மந்தை மந்தையாக வரும் எதிரிகளையும் அழித்து வெற்றியை ஈட்ட போதா!
வலிமையுடைய புலி, இரை மீது குறியாக, முன் யோசனையின்றி, மரத்தோடு கட்டப்பட்டு நிற்கும் பலி ஆட்டின் மீது பாய்ந் து வேட்டையர்களின் துப்பாக்கிக்கு பலியாகும் கதையாகிவிடும்!



மேலும் அந்தச் செயல் வாஷிங்டனிலுள்ள அரசு மேலதிகாரிகளின் கோபத்தை கிளறி அவர்கள் அதிக அளவிலான படையை நம் மீது ஏவகாரண-மாகிவிடலாம்.
போர் திட்டம்
செவ்விந்திய வீரர்கள் போரில் வீர மரணம் அடைய என்றைக்குமே தயங்கியதில்லை!
அது எனக்குத் தெரியாதா என்ன?
பழி வாங்க வேறு வழிவகை இருக்கும் போது வீணாக எதற்காக உயிரை பணயம் வைக்க வேண்டும் என்பது தான் என் கேள்வி!
?!
வேறு ஏதாவது திட்டம் வகுத்-திருக்கிறாயா?
முதலில் நான் ஹாரிஸ் கோட்டைக்குச் சென்று அங்கே இருக்கும் பொறுப்-பதிகாரி இந்த அரக்கச் செயலுக்கு என்ன சமாதானம் கூறுகிறார் என்று கேட்டறியப் போகிறேன்.
ஆமாம்... ஆனால் அதை உடனடியாக செயல் படுத்தும் நோக்கம் இல்லை.


அவன் நடந்தவற்றை திரித்து பொய் பேசக்கூடும்!
அப்படியே நாம் பழிவாங்க போர் தொடுத்தாலும் அப்பாவி-களின் இரத்தம் சிந்தப்படுவதை தவிர்த்தாக வேண்டும்!
வாஸ்தவம் தான்...! ஆனால் அவனுடைய வாக்கு மூலத்தையும் கேட்டறிய வேண்டியது என் கடமையாகும்!
மறுநாள்— டெக்ஸ் வில்லர் நவஜோ கிராமத்திலிருந்து கிளம்பினார்...
பிறிதோரிடத்தில்—
அதே வேளையில் புகை சமிக்ஞை வானத்தில் மேலெழும்பியது
ஹே...! அங்கே கவனி!
?!


ப்ளாக் புல்லின் கிராமத்தை ப்ளூ ஜாக்கட்ஸ் தாக்கி நிர்மூலமாக்கி விட்டார்கள்
டெக்ஸ் வில்லர் லூயிஸ் கோட்டை நோக்கி பயணமாகிக் கொண்-டிருக்கிறார்...
மோசமான விவகாரம் போல் தோன்றுகிறது... அப்பாவுக்கு ப்ளாக் புல் மீது அளவுகடந்த நேசம் உண்டு.
அமெரிக்க படையினர் கிராமத்தை தாக்கி அழித்ததற்கான காரணம் எனக்கு விளங்கவேயில்லை.
ப்ளாக் புல் மிகவும் சாந்த மானவர்... அமைதியை விரும்புபவர்... புரட்சிக்காரர்-களுக்கு எப்போதும் எந்த வகையிலும் அவர் துணை போனது கிடையாது.
சரி... இப்போது நாம் என்ன செய்யலாம் சொல்!
கிராமத்துக்கு சென்று பின்னர் அப்பாவை தேடிச் செல்வோம்!


சரி... கிளம்பு—
சீக்கிரம்!
படையினர் உடன்படிக்கையை மீறியிருந்தார்களேயானால் அப்பா நிதானத்தை இழந்து ஆத்திரம் கொள்வது நிச்சயம்!
விளைவு—படு மோசமாக இருக்கும்!
எதிரிகளுக்கு!
இரு தினங்களுக்குப் பின்—
அதோ... லூயிஸ் கோட்டை!
விஷயம் எப்படி திசைதிரும்பினாலும் இன்றிரவு ஒரு நல்ல படுக்கையில் நான் படுத்து உறங்கப் போவது உறுதி! சோர்வடையாதே ஸ்பயா — இன்னும் கொஞ்ச தூரம்தான்!


யாரது?
அட... அது டெக்ஸ் வில்லர் அல்லவா!
அவர் நவஜோ பழங்குடியினரின் பிரதிநிதி அல்லவா!
அவரேதான்-சார்ஜண்ட்! அவருடைய வருகை-நான்கு தினங்களுக்கு முன் நடந்த அசம்பாவிதம் சம்பந்தப்பட்டதாக இருந்தால் நம் கர்னலுக்கு இன்று பொழுது நல்லபடியாக விடிய வில்லை என்றாகிவிடும்!
அதையடுத்து...
ஹலோ காப்டன் க்ராஞ்சர்!
வரவேற்கிறேன்... வில்லர்!


இந்தக் கோட்டைக்கு யார் பொறுப்பதிகாரி?
கர்னல் அர்லிங்டன்...!
பொருத்தமான ஆசாமிதானா?
மனுஷன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பியோடி வந்தவரோ என்ற சந்தேகம் எனக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு!
இங்கே வருமுன் மேற்கு கோடியில் பணியாற்றி-யவர் -- பெரும் போர் எதிலும் பங்கெடுத்தவரல்ல எதையாவது செய்து பெயர் வாங்கவேண்டு மென்ற வெறி அவரிடம் நிறைய உண்டு.
ப்ளாக் புல் விவகாரம் பற்றி உன் கருத்து என்ன?
நான் அங்கே சொல்லவில்லை— ஆனால் அங்கே சென்று வந்த-வர்கள் சொன்னதை கேட்ட பிறகு இந்த சீருடையை அணிந்து கொண்-டிருக்க வெட்கப்-படுகிறேன்!
புரிகிறது...! மிச்சத்தை கர்னலிடமே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்!


COL. T.H. ARLINGTON
டொக்! டொக்!
...ம் உள்ளே வரலாம்!
ம்ம்... உள்ளே வந்திருப்பது யாரென்று நிமிர்ந்து பார்க்கக்கூட அக்கறை காட்டவில்லையே!
நான் பெரிய மனிதன்... என் நேரத்தை வீணடிக்காதே என்று அகம்பாவமாக உணர்த்தும் அலட்சியம்.
முழுதாக ஒரு நிமிடம் கழிந்தது. ஒரு சிகரெட்டை உருவி எடுத்துக் கொண்டார் டெக்ஸ்...
பின்னர்...
எக்ஸ்கியூஸ் மீ... கர்னல்... உங்களிடம் வத்திப் பெட்டி இருக்குமா?
?


... எத்தனை துணிச்சல்? —யார் நீ...?
ஏன் இப்படி அலட்டிக் கொள்கிறீர்கள்... அப்படி என்ன தப்பாக கேட்டு விட்டேன் நான்?
காப்டன் க்ராஞ்சர்! யார் இந்த போக்கிரி?
இவர் பெயர் டெக்ஸ் வில்லர்... நவஜோ பழங்குடியினரின் பிரதிநிதி!
நான் யாரோ ஒரு போக்கிரி அல்ல... கர்னல்?
வாயை மூடடா... அற்ப நாயே!
விஷப் பூச்சி நீ!
உனக்கு இருக்கிற குரல் வளத்துக்கு நீ நியூ ஓர்லியன் தெருக்களில் மீனை கூவி விற்றீர்களானால் கோடி கோடியாக சம்பாதித்து விடலாம்!
என்ன?
மிஸ்டர் டெக்ஸ் வில்லர்! வரம்பு மீறிப் பேசுகிறாய்...


ஒரு வேளை நீ எப்படி வம்பு பண்ணலாம் என்று அலையும் எல்லையோர ரௌடிகளில் ஒருவனாக இருக்கலாம்... நீ யாராக இருந்தாலும் ஒரு நல்ல யோசனை சொல்கிறேன்— கேள்...
சொல்ல வந்ததை சட்டென்று சொல்லி முடித்து விட்டு இடத்தைக் காலி செய் —புரிகிறதா?
ஓ... நன்றாக புரிகிறது!
ஒரே ஒரு கேள்விக்கான பதிலை மட்டும் கேட்டுத் தெரிந்து கொண்டு இங்கிருந்து ஓடிப் போய்விடுகிறேன்— ப்ளாக் புல்லின் கிராமத்தை நீங்கள் தாக்கி அழிக்க காரணம் என்ன?
சனிப்பயல்— விஷயத்தை கிளறுகிறானே!
போ வெளியே — செவ்விந்திய பிரதிநிதிக்கு சமாதானம் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் கர்னல் அர்லிங்டனுக்கு கிடையாது!
இன்னும் என்னுடைய கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே... கர்னல் அர்லிங்டன்!
உங்களுடைய நடவடிக்கையில் நியாயம் இல்லை என்பதால் தானே இப்படி மிரட்சியடைகிறீர்கள்!
வெளியே போகப் போகிறாயா— இல்லை... உன்னை கைது செய்ய உத்தரவிடவா?


நீங்கள் அவ்வாறு செய்ய முடியாது— உங்களுடைய இராணுவ அதிகாரத்துக்கு உட்பட்டவனல்ல நான்: மேலும் நீங்கள்...
இனியும் சகித்துக் கொள்ள முடியாது...
காப்டன் க்ராஞ்சர்— இவனை சிறைச்-சாலைக்கு இட்டுச் செல்!
ஆனால்... வந்து! ஸார்...
சொன்னதைச் செய்...!
வில்லர்... வந்து— நான்...
அவர் சொன்னபடி செய்... காப்டன்!
உன் மேலதிகாரி அல்லவா அவர் — இராணுவ சீருடையை அணிந்து கொண்டிருப்பதால் ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் தனக்கிருப்பதான பிரமையில் ஆட்டம் போடுகிறார்...
சைலன்ஸ்...?
என்னை அப்படியெல்லாம் அச்சுறுத்தி முடக்கிப் போட்டு விட முடியாது... அங்கே சிந்திய ஒவ்வொரு துளி இரத்தத்துக்கும் உன்னிடமிருந்து பதில் பெறாமல் ஓய மாட்டான் இந்த டெக்ஸ் வில்லர்!
அட சரிதான் சும்மா துள்ளாதீர்! என்னை அடைத்துப் போட்டு விட்டால் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று மனப்பால் குடிக்கிறீரா- பரிதாபம்!



உன் அதிகாரத்தை துஷ்பிர-யோகம் செய்கிறாய்— இருந்தும் அதற்கு நான் பணிந்து போகக் காரணம்... நீ அணிந்து கொண்டி-ருக்கும் அந்த சீருடைதான்!
அந்த சீருடையை நீ அணிந்திராத முதல் சந்தர்ப்பத்திலேயே உன் மீசையையும், பற்களும் தொண்டையினுள் சிக்கிக் கொள்ளுமாறு முகரையில் குத்து விடுகிறேனா இல்லையா-பார்!
தொலைந்து போ... சனியனே!
எனக்கு மனச்சோர்வு ஏற்படுகிறது... வில்லர்!
அலட்டிக் கொள்ளாதே!
வெளியே தாங்க முடியாத உஷ்ணம் தகிக்கும் நிலையில் 24 மணி நேரம் சிறைச்சாலையினுள் ஓய்வெடுக்க கிடைத்த அரிய வாய்ப்புக்கு மகிழ்ச்சி-யடைகிறேன்!
யாருக்காவது தகவல் அனுப்ப வேண்டுமா?
நன்றி! அதற்கு அவசியமில்லை. நான் திரும்பாவிட்டாலோ அல்லது என்னைப் பற்றி செய்தி ஏதும் சில தினங்களுக்குள் வராவிட்டாலோ நவஜோஸ் நான் வந்த தடத்தை பின்பற்றி இங்கே வந்து சேருவது நிச்சயம். ஆணவம் பிடித்த உங்கள் கர்னல் என்னை அடைத்துப் போட்டிருப்பதை அறிந்ததும் உடனே புகைசமிக்ஞைகளால் வானத்தை நிரப்பி விடுவார்கள்!
JAIL



அந்த புகை சமிக்ஞைகளை படித்தறிந்து இங்கே படையெடுக்கும் அனைத்து பழங்குடியினரும் அடுத்து என்ன செய்வார்கள் என்று நான் சொல்லி நீ புரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை!
ஆம்...!
விளைவு இப்படித்தான் இருக்கும் என்று தெரிந்தும் ஏன் நீ அவரை சீண்டினாய்...?
அப்படி ஒரு 'மரியாதை'க்கு உரியவன்தான் அவன் என்பது முதற் காரணம்.
இரண்டாவதாக, எந்த அளவுக்கு அவனுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று திட்டமாக தெரிந்து கொள்வதற்காகவும் தான்!
எங்களுடைய தவறு மேலதிகாரியின் உத்தரவுக்கு கீழ்ப்படிவது ஒன்றுதான் என்பதை நீ சிந்தித்துப் பார்த்தாயா? அந்த தவறுக்காக நாங்களும் வதை படத்தான் வேண்டுமா?
அந்தப் பழங்குடியினரின் தோலின் நிறம் நம்முடையது போலில்லை என்பதைத் தவிர வேறு எந்தக் குற்றமும் அவர்கள் செய்யாத போது அநியாயமாக கொன்று குவிக்கப்பட்டது மட்டும் எவ்வகையில் நியாயம்?
உன் கூற்றுக்கு ஆயிரம் நியாயங்கள் நீ கற்பிக்கலாம். ஆனால் உன்னை நான் மன்றாடி கேட்டுக் கொள்வதெல்லாம் இன்னுமொரு அசம்பாவிதம் நிகழத்தான் வேண்டுமா?
இப்போது சொல்வதற்கில்லை...!


எனினும், அதை தவிர்க்க வேண்டுமானால் இன்று நள்ளிரவில் நீயும் உன் வீரர்களும் நடப்பதை கண்டும் காணாதவர்களாக, எதையுமே கேளாதவர்களாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.
?
நீ குறிப்பிடுவது...?ம்— புரிகிறது! மேற்கொண்டு எதுவும் நீ சொல்ல வேண்டாம்!
சட்டென்று புரிந்து கொண்டு விட்ட உன் மதிநுட்பத்துக்கு என் வாழ்த்துக்கள்... காப்டன்!
நன்றி .. ஆனால் விபரீதமாக நீ எதையாவது—
அப்படி செய்யக் கூடிய ஆளா நான்?
நீ பயப்படும் அந்த அசம்பாவிதம் நிச்சயமாக நிகழ்ந்து விடாது என்று பிரமாணம் செய்கிறேன் - போதுமா!
நல்லது... இறைவன் நம் அனைவரையும் காப்பாற்றுவாராக.
கவலைப் படாதே!
ம்ம்... உன் வசமுள்ள ஆயுதங்கள்—
JAIL
இதோ— கொண்டு போகலாம் காப்டன்!


கார்பொரல்! அறையை திற...!
இதோ...! காப்டன்!
மறுபடியும் சந்திக்க வாய்ப்பிருக்குமோ என்னவோ... இப்போதே நல் வாழ்த்து கூறிவிடுகிறேன் வில்லர்!
உனக்கும் என் நல் வாழ்த்துக்கள்...!
கதவை சாத்தியபின் சில உத்தரவுகளை இரகசியமாக கார் பொரலின் செவியில் கிசுகிசுத்து விட்டு, வெளியே வந்து கண் காணிப்பிலிருந்த வீர னிடமும் அம்மா— திரியே சொல்லிவிட்டு மற்ற அதிகாரிகளு டன் சேர்ந்து கொண்ட காப்டன் அவர் களுக்கும் நிலை— மையை விளக் கினார்!
தொலைந்தது போ... விஷயம் அம்பலமானால் அத்தனை பேரும் இராணுவ நீதி மன்றத்தின் முன்னால் குற்றவாளிகளாக நிற்க வேண்டி வருமே!
வீணாக கலவரப்படாதே மில்டன்! யாரும் மூச்சுவிடப் போவதில்லை— இராணுவ நீதி மன்றத்தின் முன் குற்றவாளியாக நிற்கப் போவது நாம் அல்ல—நமது பெருமை மிக்க கர்னல்தான்!
க்ராஞ்சர் சொல்வது சரிதான் மில்டன்! கோட்டையில் பயங்கர கொலைகள் நிகழாமல் தடுக்க இப்போதுள்ள சூழ்நிலையில் வேறு எந்த உபாயமும் கிடையாது!
விஷயத்தை டெக்ஸ் வில்லரின் போக்கில் விட்டு விடுவதுதான் விவேகம்!
எது சரி எது தவறு என்றும், தன் வரம்பு எது என்றும் சரிவர தெரிந்து வைத்திருப்பவர் டெக்ஸ் வில்லர்.
அப்படியே நம்புவோமாக!


இருள் கவிழத் தொடங்கியது... நிலா வானில் மேலெழும்பியது...
நள்ளிரவுக்கு சற்று முன் டெக்ஸ்-வில்லர் தன் திட்டத்தை செயல் படுத்தத் தொடங்கினார்.
யாரையும் காணோம்...!...குட்!
ஜன்னல் ஒன்றை தகர்த்து வெளியேறி பதுங்கி நடந்தார் டெக்ஸ்.
...சில நிமிடங்களுக்குப் பின் —
கர்னல்...!
ஹூம்ம்— யாரது...?
பிசாசு...! நள்ளிரவு நேரம் இது கர்னல்!
?!?



என் கைத்துப்பாக்கியை பயன் படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை வைக்காதே!
?
கத்த முயன்றாயோ மறு கணம் நேராக நரகத்தை சென்றடைந்து விடுவாய்.
பேசு... ஆனால் கத்த முயற்சிக்காதே! விஷமம் பண்ண நினைத்தாயோ உடலை சல்லடைக் கண்களாக துளைத்து விடுவேன் — ஜாக்கிரதை...!
டெக்ஸ் வில்லர்...!
என்ன நோக்கத்தோடு வந்திருக்கிறாய்?
ஆம்... சரியாக அடையாளம் தெரிந்து கொண்டு விட்டாய்!
என் வார்த்தைகளை நிறை வேற்ற! —நன்றாக ஞாபகப் படுத்திப் பார்... என்ன சொன்னேன்என்று!
?
நீ சீருடை அணியாமலிருக்கும் போது உன் மீசையும் பற்களும் தொண்டையினுள் சிக்கிக் கொள்ளுமாறு உன் முகரையில் குத்து விடுவேன் என்று சொன்னேனே— மறந்து விட்டதா?
அத்தனை கொழுப்பா உனக்கு?


...ப்பூ!
கும்!
சொன்னதை நான் செய்து முடிப்பதை உன்போன்ற சோதாக்களால் தடுத்து நிறுத்தி விட முடியாது... அப்பனே!
சைத்தானே...! உன்னை தூக்கில் தொங்க விடுகிறேனா இல்லையா— பார்!
உன்னை... — அஹ்!
வரட்டுத் தவளை மாதிரி கத்தி பிரயோ- ஜனமில்லை!
க்ளிக்!
உதவி...
ஏன் வாழ்க்கை வெறுத்து விட்டதா?
?!?


...அப்படியானால் சுத்து! மறுநிமிடமே உனக்கொரு நல்ல முடிவை உறுதி செய்கிறேன்!
ஒரு ஜட்ஜின் முன் உன்னைக் கொண்டு போய் நிறுத்தி மரண தண்டனை வாங்கித்தர முடியும் என்றால்!
உன் தோலை உரிக்காமல் விடப் போவதில்லை நான்!
அற்ப புழுக்களான செவ்விந்தியர்களோடு நீ நட்புறவு கொண்டிருப்பதாக கேள்விப்பட்டேன்— ம்ம்ப்ப்...!
...உனக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டிய நிர்பந்தத்தை உண்டு பண்ணி விட்டாய்!
... உன்னை நான்— அஹ்...!
சத்!
கையாலாகாத வாய்ச் சவடால் பேர்வழியான நீ யெல்லாம் ஒரு கர்னல் — தூ...!


யுத்த தர்மத்தை மீறி முன்னெச்சரிக்கை கொடுக்காமல் அகாலவேளையில் அப்பாவி ஜனங்களின் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டதன் மூலம் இந்த இராணுவ சீருடைக்கே இழுக்கை தேடிக் கொண்டு விட்டாய்-
ஐயோ-
நா,நா...ன்...
கும்!
கிராமம் கிராமமாக உன்னைத் தூக்கி விட வேண்டும்... அப்போது செவ்விந்திய குழந்தைகளும், பெண்களும் இகழ்ச்சியாக உன் மீது காறித் துப்பவேண்டும்.
ஆயிரம் முறை சாகவேண்டும் நீ...
ஆனால் துரதிர்ஷ்டவசமாக இது இறந்து போனவர்களின் உயிரை மீட்டு வரவோ, இப்பகுதியில் வாழும் செவ்விந்தியர்களிடையே ...இராணுவத்தைப் பற்றி உருவாகியுள்ள அவப்பெயரை களையவோ உதவப்போவதில்லை!


ப்ளாக் புல் கிராமத்தில் நடந்த வெறிச் செயலே உள்ளது உள்ளபடி அறிக்கை தயார் செய்து அத்தோடு உன் இராஜினமா கடிதத்தையும் இணைத்து இராணுவ தலைமையகத்துக்கு அனுப்பு.
நடக்காது!
கர்னல அர்விங்டன்... என் கணிப்பில் நீ ஓர் அற்பப் புழுவை விட மட்டமானவன். ஆனாலும் உனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க உத்தேசித்துள்ளேன்...
இந்த மிரட்டலுக்கெல்லாம் பணிந்து போகிறவன் நானல்ல... இராணுவ நீதி மன்றத்தில் குற்றவாளியாக நீ நிற்கப் போவது நிச்சயம்!
உன்னுடைய மடத்தனத்தினால் செவ்விந்திய இனத்தவர் பலரும் கொதித்தெழுந்து இந்த லூயிஸ் கோட்டையை முற்றுகையிட்டு தாக்கி அழிக்கப் போகிறார்கள்
யார் வேண்டுமானாலும் வரட்டும்... என் போன்ற வீரர்கள் போரிட அஞ்சமாட்டார்கள்!
வெறும் வாய் சவடால்...!
உன் மாதிரி வாய்ச் சொல் வீரர்கள் போர் என்று வந்து விட்டால் மற்றவர்களை முன்னணிக்கு அனுப்பிவிட்டு வாளை அணி வகுப்பில் அலங்காரப் பொருளாக அணிந்து கொள்வார்கள்!



என்னுடைய வாள்!
இதை வைத்துக் கொண்டி-ருக்க உ[redacted] அருகதை கிடையாது, அர்லிங்டன்!
கராக்!
விரைவிலேயே மீண்டும் உன்னை சந்திக்க வருவேன்!
சண்டாளா... ஆஆ!
சத்!
முதல் கட்டம் முடிந்தது...!
உஷ்ஷ்...!


க்ராஞ்சர் தன் வாக்கை காப்பாற்றி விட்டார்... கோட்டையிலிருப்போர் அனைவரும் பார்வை-யற்றவர்களாக, செவிடர்களாக நடந்து கொள்-கிறார்கள்!
உன் குதிரையை தேடி நேரத்தை இங்கே போக்கிக் கொண்டிராதே...
உனக்காக கோட்டை கதவுக்கு வெளியே தயாராக காத்துக் கொண்டிருக்-கிறது அது.
நன்றி!
...உன் வாக்கை காப்பாற்ற மறந்து விடாதே!
கவலைப்படாதே... இந்த கோட்டையினுள்ள எந்த சிப்பாயின் உயிருக்கும் செவ்விந்தி-யர்களால் ஆபத்து வராது.
அந்த உத்தர-வாதம் போதும், விவ்லர்!
நல்வாழ்த்துக்கள்!
நன்றி... விடை பெறுகிறேன்!



சில வினாடிகளுக்குப்பின் பாதி சாத்தி-யிருந்த கோட்டை கதவை தள்ளித் திறந்து வெளியேறினார் டெக்ஸ்.
அருமை!
ஒரு ஜெனரலாக வரக்கூடிய தகுதி இருக்கிறது க்ராஞ்சருக்கு!
... காத்து நின்ற குதிரையின் மீது தாவி ஏறி அமர்ந்தார்...
மாறாக, நாளை அவனும் மற்றவர்களும் அர்லிங்ட னிடம் வகையாக வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறார்கள்! ப்பூ! ஆனால் அப்பாவி உயிர்கள் வீணாக பலியாவதை தவிர்த்து விட்ட திருப்தி அவர்களுக்கு மிஞ்சக்கூடும்.
இரு தினங்களுக்குப் பின்—
யாயாஹீஹீ...! டெக்ஸ் வில்லர்...!
அப்பாடா... ஒருவழியாக வந்து சேர்ந்து விட்டார்!


அங்கே என்னதான் நடந்தது என்று விரைவிலேயே தெரிந்து விடும்.
வெகு ஆவலோடு காத்துக் கொண்டிருந்தோம்!
நாளை மாலை எல்லா வீரர்களும் பாறை முகத்தருகே வந்து சேரவேண்டும்!
மற்ற பிரிவினருக்கும் உடனே சமிக்ஞை அனுப்புங்கள்!
போராட்ட குழுவை கூட்டுவது தான் உங்கள் உத்தேசமா... அப்பா ...!
ஆம்... சந்தேகமா உனக்கு?
சீக்கிரம்! புகை சமிக்ஞை அனுப்ப உடனே தீ மூட்டுங்கள்!



ஹரிஸ் கோட்டையிலிருக்கும் சிப்பாய்களை தாக்கி கொன்று குவிப்பதல்ல நம் நோக்கம் என்பதை தெளிவாக ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறேன்...
அப்படியானால் ப்ளாக் புல்லுக்கும் அந்த கிராமத்திலிருந்த அப்பாவி ஜனங்களும் கொல்லப்பட்டதற்கும், பழிதீர்க்காமலே விட்டு விட வேண்டுமா?
அப்படி-யில்லை...
அப்பாவி ஜனங்கள் கொல்லப்பட்டதற்கு வேறு சில அப்பாவிகளை கொன்று குவிப்பது பழிதீர்த்துக் கொண்டதாகாது!
எல்லோரும் என்னோடு என் குடிசைக்கு வாருங்கள்... என் திட்டம் என்னவென்று சொல்கிறேன். கேட்டு விட்டு உங்கள் கருத்தை சொல்லுங்கள்.
இதற்கிடையே, நவஜோ கிராமத்திலிருந்து முதல் புகை சமிக்ஞை மேலெழும்பலாயிற்று!



அங்கே லூயிஸ் கோட்டையிலும் துரித நட-வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன...
ம்... சீக்கிரம்! ஒருமணி நேரத்திற்குள் கிளம்பியாக வேண்டும்!
என் அபிப்பிராயம் என்னவென்ருல்...
உன் அபிப்பிராயத்தை கேட்பதில் எனக்கு ஆர்வமில்லை லெப்டினென்ட் மில்டன்!
கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் நம்மை தாக்க அந்த அயோக்கிய ராஸ்கல் டெக்ஸ் செவ்-விந்திய வீரர்களை இதே வேளையில் அங்கே ஒன்று திரட்டிக் கொண்டிருக்கக் கூடும்... நம்மை தற்காத்துக் கொள்ள வேண்டுமானுல் அவர்களுக்கு அவகாசம் கொடுக்காமல் முந்திக் கொண்டு அதிரடி தாக்குதலில் இறங்குவதுதான் ஒரே வழி!


அந்தப் பயலுக்கு வாழ்நாள் முழுவதும் நினைவிருக்கும் படியாக ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும்... போரில் அவன் தப்பி பிழைத்துக் கொண்டால் யுமாவி-லுள்ள மோசமான சிறையில் தன் மிச்ச நாட்களை கழிக்க வேண்டியிருக்கும்.
புரிந்து கொண்டீர்களல்லவா?
யெஸ்... கர்னல்!
புறப்பட ஆயத்தமாகுங்கள்!
சில நிமிடங்களுக்குப்பின் கண்காணிப்பு படைப்பிரிவு கோட்டையினுள் வேகமாக நுழைந்தது...
சார்ஜண்ட் சார்லி அறிக்கை சமர்ப்-பிக்க வந்திருக்கிறேன் ஸார்!
?


ஏதாவது விசேஷமா?
ஆமாம்... போருக்கான ஏற்பாடுகளை துரித கதியில் செய்து வருகிறான் வில்லர்!
விபரமாகச் சொல்...
எல்லா மேட்டுப் பகுதி-களிலிருந்தும் யுத்தத்துக்-கான புகை சமிக்ஞைகள் மேலெழும்பின...
நிஜமாகவா...?
ஆமாம்...! எல்லா பழங்குடி-பிரிவின் தலைவர்களும் பாறை முகத்தருகே கூட வேண்டும் என்பது செய்தி!
அங்கே தலைவர்கள் கூடுவது யுத்த ஏற்பாடு பற்றி ஆலோ-சனை பண்ணி தீர்மானம் எடுக்க!
ம் ம்!
நல்லது சார்லி! நீ போகலாம்—நான் கர்னலுக்கு விஷயத்தை தெரியப் படுத்துகிறேன்!
சென்று வருகிறேன்-காப்டன்!



சற்று நேரம் கழித்து
நான் எதிர்பார்த்ததுதான்...
இந்த கர்னல் அர்லிங்ஸ்டனின் யுத்த தந்திரம் எப்படிப் பட்டது என்று புரியவைக்கிறேன் அவனுக்கு!
அவர்கள் ஆலோசனை நடத்தி தீர்மானம் எடுக்கு முன் நாம் மின்னல் வேகத்தில் பாய்ந்து அவர்களுடைய கிராமங்களை தாக்கி தரைமட்டமாக்கி விடலாம்!
அவர்கள் முந்திக்கொண்டு விட அனுமதியாது நாம் துரிதமாக செயல் படவேண்டும்!
பைத்தியக்காரத் தனமான திட்டம்!
வரலாம்...!


படைகள் புறப்படத் தயார்...கர்னல்!
நல்லது லெப்டினென்ட்
சரி - கிளம்புங்கள் அனைவரும்!
அதையடுத்து படைகள் லூரயிஸ் கோட்டையை விட்டு வெளிக்கிளம்பி வேகமாக நகர்ந்தன...
அட்டகாசமான நபர்... இந்த கர்னல்! எதிரிகளை நசுக்கி நாசம் செய்துவிடுவது உறுதி!
கோட்டையை இப்படி அம்போ என்று விட்டுச் செல்லும் பொறுப்பதிகாரியைப் ப ருமையாக சொல்வதற்-கில்லை !
?


எதிரிகள் தொலைதூரத்தில் போருக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளை-யில் கோட்டையை பாதுகாக்க முப்பது வீரர்கள் போதும்!
அபபடியா நினைக்கிறாய்?
ஆ...மாம்!
நம் வீரர்கள் வெகு தொலைவில் இருக்கும் போது எதிர் படை இங்கே வந்து சேர்ந்தால் என்னவாகும் என்று சிந்தித்துப்பார்...
அங்கே —
இப்போது வில்லர் தன் கருத்தை வெளியிடட்டும்!
அனைத்து பிரிவு தலைவர்களும் இப்போது வெளி-யிட்ட கருத்தையொட்டியே அவருடைய கருத்-தும் இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்!



உன் எதிர்பார்ப்பு அர்த்தமற்றது ரெட் க்ளவுட்!
?!
என் படையினரை எதிர்த்துப் போரிடும் தைரியம் நம் நண்பருக்கு இல்லையா?
ரெட் க்ளவுடின் யோ னையை அப்படியே செயல்படுத்தினால் செவ்விந்திய சகோத ர்களுக்கு ஆபத்து வந்து சேருமே என்றுதான் நான் அஞ்சுகிறேன்!
அவர்கள் எண்ணிக்கையில் நம்மைவிட அதிகம் என்பதோடு அவர்களிடம் சக்தி வாய்ந்த பீரங்கிகளும், நவீன ஆயுதங்கள் பலவும் இருக்கின்றன என்பதை நீங்கள் அனைவரும் மறந்து விட்டதாகவே தோன்றுகிறது!
அப்படியானால் அவர்களுடைய வெறிச்செயலுக்கு பழி வாங்காமலே விட்டுவிட வேண்டியதுதானா?
அப்படியில்லை ரெட்க்ளவுட்! பழிவாங்கத் தான் போகிறோம்! ஆனால் அந்த முயற்சியில் நம் தோழர்கள் யாரும் இனியும் இரத்தம் சிந்தக்கூடாது என்பதோடு வாஷிங்டனிலுள்ள அமெரிக்க அரசின் கோபத்தையும் கிளறுவதாக இருக்கக் கூடாது!
ம்ம்...!
அது எப்படி சாத்தியம் என்றுதான் விளங்கவில்லை?



நல்ல ஏற்பாடு—அப்படியே செய்வோம்!
மறுநிமிடம் கார்லண்டு கோட்டையை நோக்கி டைகர் ஜாக் பயணமானான்.
மற்றவர்கள் மேற்கொண்டு விபரங்களை கேட்டறிந்து கொண்டு அவரவர் கிராமத்திற்கு திரும்பலானார்கள்.
விடை பெறுகிறோம்.. டெக்ஸ்!
விரைவிலேயே சந்திப்போம்!
யாயா ஹிஹி...!
தீயை அணைத்து விட்டு புறப்பட தயாராகுங்கள்!
ம்ம்!


சூரிய உதயத்திற்கு முன் தேவதையின் அருள் வாக்கை கேட்டறிய விரும்புகிறேன்!
என் திட்டத்தில் உனக்கு நம்பிக்கை ஏற்படவில்லையா—
அப்படி சொல்லவில்லையே நான்!
ஆனால் முகத்தில் தெளிவைக் காணோமே!
அவரை குறை கூறி பயனில்லை டாடி! உங்களுடைய திட்டத்தில் சிறு குளறுபடி ஏற்பட்டாலும் விளைவு விபரீதமாகிப் போகும்!
கோணல் புத்தி!
எல்லாம் நல்லபடியாகவே நடக்கும் கவலைப்படாதே!
தூக்கு மேடையை நோக்கி வரும் சூறாவளியிடம் தூக்கிலிடுபவனும் இப்படித்தான் சொல்வதுண்டு!
மறுநாள்—மதிய வேளையில்...


இங்கே தங்கிச் செல்லலாம் ... மற்றவர்களுக்கும் தெரிவி காப்டன்!
இதோ...!
அவர்கள் அங்கேயே- நின்றுவிட்டார்கள்!
டூம்!
இவர்கள் இங்கே இருப்- பதை டெக்ஸ்வில்லருக்கு சமிக்ஞை அனுப்பி தெரி விப்போம். வா!
சில நிமிடங்களுக்குப் பின்...
அங்கே — அதை கவனி!
?!
அதற்குள் நம் வருகை பற்றிய செய்தியை செவ்விந்திய ஒற்றர் கள் சமிக்ஞையில் பறைசாற் றத் தொடங்கி விட்டார்கள்!
அதிரடி தாக்குதல் என்று சொன்னார் கர்னல். ஆனால் வகையாக அகப்- பட்டுக்கொண்டு விழிக்கப் போகிறார் என்று தோன்றுகிறது!
ஆம்!



அடுத்த அரைமணி நேரத்திற்குள்ளாக, நம் வருகையை இங்குள்ள அனைத்து பழங்குடி பிரிவினரும் அறிந்து கொண்டு விடுவது உறுதி!
இது உங்களுக்கு கவலையளிக்-கிறதா தோழர்களே?
நம்முடைய பீரங்கி படையையும் அதை தொடரும் மற்ற படைபிரிவுகளின் தாக்குதலையும் அந்த காட்டு எலிகளால் சமாளித்து விடமுடியும் என்று நினைக்-கிறீர்களா?
அப்படியில்லை கர்னல்!
ஆனால் அதிரடி தாக்குதல் என்பது அர்த்தமற்றுப் போய்விட்டது!
ச்சு...!
அதனால் என்ன...? நமக்கு சவால் விட்டுச் சென்ற அந்த பரதேசிப் பயல் டெக்ஸ் வில்லருக்கு நம் கத்திகள் எத்தனை கூர்மையானவை என்று நிரூபித்துக் காட்டுவோம்! குதிரையில் ஏறுங்கள்... அடுத்த ஐந்தாவது நிமிடம் நாம் பயணத்தை தொடர்ந்தாக வேண்டும்!
ஆனால்... வீரர்களும், குதிரைகளும் ரொம்பவும் களைத்துப் போயிருக்-கிறார்கள்... கர்னல்!
மூடு வாயை!



சரியான உளறல்!
அந்த சமிக்ஞைகள் நாம் இங்கே முகாமிட்டிருப்பதாக எதிரிகளுக்கு தெரிவிக்கின்றன...
சுத்த வீரன் எப்போதுமே களைத்துப் போக மாட்டான் .. குதிரைகளை பொறுத்த மட்டில் தீனி வைத்து தண்ணீர் காட்டிவிட்டால் சரியாகப் போய்விடும்!
எனவே, உடனே சென்று நாம் தாக்கினால் 90 சதவீதம் அது ஓர் அதிரடி தாக்கு-தலாகவே அமையும்! ம்... கிளம்புங்கள்!
அதேவேளையில்—
அதோ... அங்கே கவனி
?!
அமெரிக்க படைகள் ரியோ ப்யூப்ளாவில் முகாமிட்டு தங்கியிருக்கின்றன!



ஆத்திரம் கொண்ட கர்னல் உடனே கிளம்பி விட்டான் போலிருக்கிறது!
...கவனி—செய்தி வேறுவிதமாக தெடர்கிறது!
அமெரிக்க படைகள் பயணத்தை தொடரு கிறார்கள்
இதுபோதும்— செய்தியை வில்லர் புரிந்து கொண்டு விடுவார்— வா நாம் போகலாம்!
புறப்படு!
சமிக்ஞை அனுப்பிய நாய்களை நாம் எப்படியேனும் பிடித்து விட வேண்டும்...
சாத்தியமே இல்லை சார்ஜண்ட்! அங்கே... பாருங்கள்!
அவர்கள் செல்லும் வேகத்தை பார்த்தால் அந்தக் குதிரைகள் புத்துணர்ச்சியோடு இருப்பதாக தோன்றுகிறது.



ம்... பிரயோஜனமில்லை சார்ஜண்ட்! வெகு தூரம் சென்று விட்டார்கள்!
நாசமாகப் போக!
களைத்துப் போன குதிரைகளை வைத்துக் கொண்டு என்ன சாதிக்க முடியும்?
இதற்கிடையே,
உங்கள் கருத்து என்ன?
கர்னல் உடனே பயணத்தை தொடர்வதைப்பற்றியா? யாராகயிருந்தாலும் அதைத்தான் செய்வார்கள்
அப்படியா? எனக்கு அது முட்டாள்தனமாக படுகிறது!
நீ யதார்த்தமான கோணத்தில் பார்க்கிறாய்!
யுத்த அனுபவம் இன்றி, எதையாவது சாதிக்கவேண்டு மென்ற வெறியோடு அலையும் அர்லிங்டனின் இடத்தில் நீ இருந்திருந்தாலும் இதையேதான் செய்திருப்பாய்!



செவ்விந்தியர்களோடு பொருதி ஏதாவது ஒரு வெற்றியை ஈட்டி புகழ் சம்பாதிக்க அலைகிறான் அவன். அந்த புகை சமிக்ஞையை கண்டதும் ஏதோ சிவப்புத்துணியை கண்ட காளை போல் அவனுக்கு வெறி ஏற்பட்டிருக்கும்.
முதலில் வந்த சமிக்ஞை அவர்கள் தங்குவதாக அல்லவா தெரிவித்தது.
களைப்புற்றிருக்கும் குதிரைகளுக்கும், வீரர்களுக்கும் ஓய்வு அவசியமாக இருந்தும் கூட அவனுடைய மூர்க்க குணம் காரணமாக பயணத்தை தொடர உத்தரவிட்டிருப்பான்!
வாஸ்தவம்தான்...
சமயோசிதமான காரியமல்லதான்— ஆனால் நமக்கு ஏற்றது!
நிதானமாக சிந்திக்கும் திறன் அவனுக்கு இருக்குமேயானால் ப்ளாக் புல்லின் கிராமத்தை நாசம் செய்திருக்கவே மாட்டான்...
இப்படி முன்னேயும் செல்ல முடியாமல் பின்னேயும் போக முடியாமல் திணற வேண்டிய அவசியமும் நேரிட்டிராது!


வாஸ்தவம்தான் டாடி! அர்லிங்டனின் மண்டைக் குள்ளே மூளைக்குப்பதில் களிமண்தான் இருக்கக்கூடும்!
சரியாகச் சொன்னாய்!
சமிக்ஞைகளை கண்டோம்! வேறு செய்தி ஏதும் உண்டா?
இல்லை!
அப்படியானால் மேற்கொண்டு டெக்ஸ் வில்லரின் திட்டப்படி செயலாற்ற வேண்டியது தான்! குதிரையில் ஏறுங்கள்— போகலாம்!
கயிற்றை கற்றாழையோடு பிணையுங்கள்!
ம் சீக்கிரம்!
சரக்!
யாயாஹா ஹீஹீ


டெல்காடோ ... நாங்கள் ரெடி!
புறப்படுங்கள்...!
நேர் பின்னே ஒற்றர் இருவர் தொலைவில் நிற்கிறார்கள்
ம்ம்...!
கற்றாளை துண்டுகளை கட்டி இழுத்துச் செல்வதன் மூலம் தூசிப்படலத்தை பெரிய அளவில் எழுப்பியவாறு டெல்காடோ தன் சகாக்களோடு மேட்டுப்பகுதியிலிருந்த பாழடைந்த கிராமம் ஒன்றை நோக்கி விரைந்தான்.
அதே வேளையில்...
டெல்காடோ சமிக்ஞையை பார்த்து விட்டிருப்பானா?
நிச்சயமாக!
சொன்ன வாக்குப்படி செய்யும் நம்பகமான ஆசாமி டெல்காடோ! பாழடைந்த கிராமத்தை நோக்கி இந்நேரம் அவன் தன் வீரர்களோடு விரைந்து சென்று கொண்டிருப்பது உறுதி!
71


ஒரு வேளை ரெட்ஹாண்ட் சமிக்ஞையை பார்க்காமலிருந்திருக்கலாம். யார் மூலமாவது செய்தி அனுப்பினால் நல்லது!
உண்மைதான்! ஆனால் செய்தியை எதிரிகளும் தெரிந்து கொண்டு விடுவார்கள் நம் திட்டம் கெட்டு விடும்!
புகைசமிக்ஞை செய்தியை விரைவில் தெரிவித்து விடுமே?
நான் செல்ல வேண்டும் என்று விரும்புகிறீர்களா?
இல்லை! கோட்டையில் எனக்கு உன் உதவி தேவைப்படும்— வேறு யாரையாவது அனுப்பு!
என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அவனுக்கு விளக்கி விட்டு அவன் தன் வீரர்களோடு உடனே பாழடைந்த கிராமத்துக்குச் சென்று டெல்காடோவோடு சேர்ந்து கொள்ள வேண்டும் என்று தெரிவி.
நல்லது!
அதே சமயம்—
அதோ... அவர்கள் போகிறார்கள்—கவனி!


பாழடைந்த கிராமத்தை நோக்கி அவர்கள் செல்வதாக தெரிகிறது
வா... போய் கர்னலிடம் தெரிவிப்போம்!
ல நிமிடங்களுக்குப்பின்— செவ்விந்தியர்கள் வ்வழியாக சென்று கொண்டிருக்கிறார்கள் ன்ற விபரம் கர்னலுக்கு தரிவிக்கப்பட்டது...
அங்கே பதுங்க அவர்கள் உத்தேசித்திருந்தால் அதற்காக நிச்சயம் வருந்தப் போகிறார்கள்... விரையுங்கள்...!
காப்டன் க்ராஞ்சர்! சுமார் 20 வீரர்களோடு சென்று வலப்பக்கமாக பரவி செல்! அதே மாதிரி இடப்பக்கம் காப்டன் கார்ட்டன் செல்லட்டும்! கணவாய் பகுதியிலேயே அவர்களை மடக்கி விட வேண்டும்!



நம்முடைய இந்த முயற்சி மட்டும் பலித்து விட்டால் பாதி வெற்றி எட்டி விட்ட மாதிரிதான்!
உத்தரவு...கர்னல்!
வீரனொருவனை அனுப்பி பின் தங்கி விட்ட பீரங்கி படையினரை விரைந்து வரச் சொல்!
அதே வேளையில்—
படையினர்!
எங்கே?
அங்கே— கருகிய பாறையின் பின்னல் பாழடைந்த கிராமத்தை நோக்கி முன்னேறி வருகிறார்கள்
நல்லதாகப் போயிற்று!
வா...போய் பார்க்கலாம்!
இதோ —
எத்தனை வீரர்களை தன்னோடு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான் அந்த கர்னல் என்ற விபரத்தை தெரிந்து கொண்டு விடலாம்!



சில நிமிடங்களுக்குப் பின்...
ஹூம்ம்... உத்தேசமாக கணக்- கிட்டால் ஏறத்தாழ தன் படைப் பிரிவு மொத்தத்தையுமே இங்கே கொண்டு வந்து விட்டான் என்று தோன்றுகிறது!
பீரங்கி படையையும் உடனழைத்து வந்தி ருக்கிறுன்...
ிவகாரம்தான்! டெல்காடோவும் ரெட் ஹாண்டும் அங்கே பாழ டைந்த கிராமத்தில் இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டால் படு பத்தாகி விடும்!
நாம் குறுக்கிட்டு பீரங்கி படையை துண்டித்து விட வேண்டும்.
அர்லிங்டனுக்கு தெரிந்தால் நம்மீது பாய்வது நிச்சயம்!
சாத்தியமே இல்லை!
ாம் பீரங்கி படையை தாக்கும் போது ர்லிங்டன் வெகு தொலைவில் இருப்பான் லிர் இங்கே நடப்பது அவனுடைய சவிக்கு எட்டாது!
கிளம்புவோம்!
கணவாய் முகப்பில் போய் காத்திருப்போம்!



இதற்கிடையே —
சார்ஜண்ட் . இந்த வாயில்லா ஜீவன்கள் களைப்பினால் மயங்கி வீழ்ந்து விடக் கூடும்!
நாசமாகப் போச்சு— வேகத்தை மட்டுப் படுத்துவோம்!
நாம் அரைமணி நேரம் தாமதமாக போய் சேருவதால் ஒன்றும் மோசம் போய் விடாது!
வாஸ்தவம்தான்!
காலையிலிருந்து ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கின்றன பாவம்!
தங்களை எதிர் நோக்கியிருந்த அபாயத்தைப் பற்றி அவர்கள் கற்பனை பண்ணிப் பார்க்கக் கூட இல்லையாதலால் அரை மணி நேரம் கழித்து திடீரென தோட்டாக்கள் தங்களை குறி வைத்து சரமாரியாக வந்தபோது திகைத்து தடுமாறி குழம்பிப் போனார்கள்
டுமீல்!
டுமீல்!
ஜாக்கிரதை!
இது என்ன அநியாயம்?



எதிரிகளின் விஷமம் இது— விலகிச் சென்று விடுவதுதான் விவேகம்!
கணவாய் முகப்பில் நமக்காக காத்துக் கொண்டிருந் திருக்கிறார்கள்...
டுமீல்!
விரட்டுங்கள் குதிரையை!
விரைந்து சென்று பீரங்கி வண்டியோடு பிணைக்கப் பட்டுள்ள குதிரைகளை விடுவியுங்கள்!
சரி...!
தப்பியோடும் அமெரிக்க வீரர்களை அச்சுறுத்தி நவஜோஸ் துப்பாக்கிகளை இயக்கிக் கொண்டிருக்க...
டுஷ்! டும்!


...மற்றவர்கள் பீரங்கி வண்டிகளை நெருங்கி குதிரைகளை அவிழ்த்து விட்டு விரட்டினர்...
யாயாஹீ ஹீ ...!
நம்மை விரட்டிக்கொண்டு வருகிறார்களா?
என்னைக் கேட்காதே— நானும் உன்னைப் போல் குதிரையை விரட்டுவதில் கவனமாக இருக்கிறேன்!
அங்கே எழுந்த பேரிரைச்சலை வைத்து கணித்தால் அவர்கள் நூறு பேராவது இருக்கக்கூடும்— நாம் விரைந்து சென்று மற்றவர்களோடு சேர்ந்து கொள்வது ஒன்றுதான் புத்திசாலித் தனமானகாரியமாக இருக்கும்!
இரண்டு மூன்று மைல் தொலைவுக்கு முடிந்தவரை அதிகமாக ஓசை எழுப்பியவாறு அவர்களை விரட்டிச் சென்றால் நல்லது.
நம்மீது குறிவைத்து ஒரு துப்பாக்கி கூட இயங்கவில்லை...
அவர்கள் இருந்த பரிதாபகரமான நிலையில் தப்பி யோடினால் போதும் என்று ஓடி விட்டார்கள்.
அதை நான் கவனித்துக் கொள்கிறேன்!


துப்பாக்கிகளை முழங்கியவாறு கூக் குரலிட்டுச் சென்றால் ஆயிரம் செவ் விந்திய பிசாசுகள் தங்களை விரட்டி வருகின்றனவோ என்று மிரட்சி யடைந்து நடுநடுங்கிப் போவார்கள்.
அதற்கிடையே நான் இந்த நான்கு பீரங்கி களையும் உடைத்து பிரித்து காயலான் கடைச் சரக்காக மாற்றிவிடுவேன்!
சதுரங்கப் போர்!
யாயா ஆஆ!
ஆரவாரமாக குதிரையை விரட்டிக் கொண்டு பின்தொடருங்கள்...!
சரி... இனி நம் பங்கு வேலையை கவனிப்போமா!
முதலில் நிறைய களிமண்ணையும் கற்களையும் கொண்டு வந்து பீரங்கி வண்டிகளின் அருகே குவியுங்கள்!



பீரங்கிகளின் கதியை பின்னர் அர்விங்டன் காண நேரிட்டால் அதிர்ந்து போவான்!
இதற்கிடையே —
அதோ போகிறார்கள்— துப்பாக்கியை முழக்குங்கள்!
யாயாஹூ ஈஈ...!
டுமீல்! டுமீல்!
தொலைந்தோம்..! நம்மை விரட்டிக் கொண்டு நெருங்கி வந்து விட்டார்கள்!
குதிரைகளை விரட்டுங்கள்! இல்லையேல் தோட்டாக் ள் நம் மண்டையை சிதறடித்து விடக்கூடும்!
இன்னும் அரைமைல் தொலைவு செல்வதற்குள் குதிரைகள் சோர்ந்து வீழ்ந்து விடுவது நிச்சயம்!
தப்பிக்க முடியுமென்று தோன்றவில்லை சார்ஜண்ட்!
அவை எக்கேடும் கெட்டுப் போகட்டும்!


ஜாக்கிரதை...! ரொம்பவும் கிட்டே செல்லாதீர்கள்— திருப்பி சுட்டாலும் சுடுவார்கள்!
ம்ம்...!
சார்ஜண்ட்... நாம் இங்கே சற்று நின்று—
குதிரையை விரட்டிக் கொண்டு வாடா முட்டாள் — நின்றால் மரணம் நிச்சயம்!
அதே சமயம்— பீரங்கிகளில் வெடி மருந்தை இட்டு நிரப்பி திரியையும் இணைத்து விட்டு அவற்றின் வாய் பகுதியை களி மண்ணாலும் கற்களாலும் இறுக மூடிய பின், நவஜோ வீரர்களையும் குதிரைகளையும் பாதுகாப்பான தொலைவுக்கு சென்று விடுமாறு கூறினார் டெக்ஸ் வில்லர்...
தீ வைத்து விட்டேன்— விலகி ஓடிப் போய் விடுவோம்!
ஓடுங்கள்...!


எந்த விநாடியும் அவை வெடித்துச் சிதறக் கூடும்!
அவர் சொல்லி வாயை மூடு முன்—
டம்-டமால்!
முதல் கட்டம்— வெற்றி!
டம்-
டமால்!
நம் நெப்போலியனின் பீரங்கி படை காலி!
இனி இந்த பீரங்கிகள் செவ்விந்திய வீரர்-களுக்கு எதிராக சீறாது!




அங்கே—
அந்த இடி முழக்க ஓசை செய்தியை தெளிவாக தெரிவிக்கிறது!
நில்லுங்கள்!
வேட்டை இத்தோடு முடிந்ததா?
ஆமாம்... இனி நாம் திரும்பிச் சென்று அப்பாவோடு சேர்ந்து கொள்ளலாம்!
அதே வேளையில்—
அதோ தெரி- கிறது பாழ- டைந்த கிராமம் ...
ம்ம்!
விரைந்து செல்வோம்... வாருங்கள்!


திட்டத்தில் ஏதாவது குளறுபடி நேரிட்டால் தொலைந்தோம்!
பயப்படதேவையில்லை...!
அர்விங்டனோடு எப்படி மோத வேண்டும் என்று டெக்ஸுக்கு தெளிவாக தெரியும்— அத்தோடு அவருடைய திட்டம் என்றைக்குமே தோற்றதில்லை!
ரெட் ஹாண்டை இன்னமும் காணோமே! படையினர் வந்து சேருமுன் அவன் வந்து நம்மோடு சேர்ந்து கொள்வதாக அல்லவா ஏற்பாடு!
அவன் வந்து சேருவான்!
அப்படியே அவன் வரத் தவறினாலும் நாமாகவே சமாளித்து விட முடியும்! நாமென்ன மோதவா போகிறோம்— சும்மா பாச்சா காட்டி எதிரிகளை திசை திருப்ப போகிறோம்— அவ்வளவுதானே!


சீக்கிரம்! ஓடிச் சென்று வீடுகளினுள் பதுங்கிக் கொள்ளுங்கள்!
குதிரைகளையும் அப்புறப் படுத்துங்கள்!
யாம்ப்பா! ப்ளூ ஜாக்கட்ஸ் வெகு தொலைவிலில்லை என்று ரெட் ஹாண்டுக்கு உடனே சமிக்ஞை அனுப்பு!
யாயாஹீ ஈ...!
ஹி ஹீஹீ!
இதற்கிடையே—
கண்காணிப்பு குழுவினர் திரும்பி வருகின்றனர்... கர்னல்!
நல்லது!
செவ்விந்திய புழுக்களின் நடவடிக்கைபற்றி உருப்படியான தகவல் கொண்டு வந்திருக்கக்கூடும்!



கண்காணிப்பு குழு தகவல் கொண்டு வந்திருக்கிறோம்... கர்னல்!
விஷயத்தை சீக்கிரம் சொல்!
சுமார் ஆறு மைல்களுக்கு அப்பால் அவர்களை கண்டோம்-அனைவரும் பாழடைந்த கிராமத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள்!
நிச்சயம்தானே?
புழுதிப்படலம் எங்கள் பார்வையை மறைத்த போதிலும் அந்த களவாணி-கள் செல்லும் திசையை தெளிவாக தெரிந்து கொள்ள முடிந்தது!
நல்லது!
இன்றிரவு அந்த பாழடைந்த கிராமத்தில் தங்கி விட்டு விடிந்ததும் மறுபடியும் பயணம் செல்வார்கள் போல் தோன்றுகிறது!
அடுத்து அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் வகுத்துக் கொடுக்கப் போகிறோம்... ஆமாம்!


அந்த பாழடைந்த கிராமத்தில் அவர்கள் இடையூறு இன்றி நிதானமாக முகா மிடட்டும்! இரவில் அந்த மேட்டுப் பகு-தியை சுற்றி வளைத்துக் கொண்டு தாக்கி அனைவரையும் கொன்று குவிப்போம்!
காப்டன் நார்ட்டன், முதல் பிரிவை மேட்டுப் பகுதியின் வலப்பக்கமாக நட திச் சென்று எதிரிகள் மேற்கொண்டு ப ணத்தை தொடர முடியாதவாறு தடுத்து நில்லுங்கள்!
உத்தரவுப்படியே—கர்னல்!
இதற்கிடையே பாழடைந்த கிரா மத்திலிருந்து முதல் சமிக்ஞை மேலெழும்பத் தொடங்கியது...
தெற்கே இரண்டு மைல் தள்ளி வந்து கொண் டிருந்த செவ்விந்திய குழுவினர் உடனே சமிக்ஞையை கண்டு கொண்டனர்—
?
கவனி!
டெல்காடோ... பாழடைந்த கிராமத்தில் இருக்கிறார்...
ரெட் ஹாண்ட் சென்று முன்பே தீர்மானிக்கப் பட்ட இடத்தில் டெக்ஸ் வில்லரோடு சேர்ந்து கொள்ளவேண்டும்!



செய்தி முடிந்து விட்டது...!
வாருங்கள்... போகலாம்!
டெல்காடோ நம் உதவி தேவையில்லை என்று ீர்மானித்து டெக்ஸ் வில்லரை நோக்கி செல்லுமாறு கூறுவதற்கு தகுந்த காரணம் இருக்கக்கூடும்.
ஒருவேளை திட்டமிட்ட கெடுவுக்கு முன்னதாகவே கோட்டையை தாக்கு-வதென்று டெக்ஸ் தீர்மானித்து விட்டிருக்கக்கூடும்.
ருக்கலாம்! காரணம் எதுவாக இருந்-ாலும் நாம் உடனே போய் அவரோடு ர்ந்து கொள்வது தான் சாலச் சிறந்தது!
ஆமாம்!
அதோ... சார்ஜண்ட்— அந்த சமிக்ஞைக்கு என்ன பொருள் என்று இப்போது தெரிந்து விடும்!


என்ன சேதி?
டெல்காடோ பாழடைந்த கிராமத்தில் இருக்கிருன்...!
நவஜோஸ்ஸுடன் இணைந்து கொள்ளுமாறு ரெட் ஹாண்டுக்கு செய்தியனுப்பியிருக்கிருன்...
எந்த இடத்தில்...?
சமிக்ஞையில் அந்த விபரம் இல்லை...
அல்லது உன்னல் புரிந்து கொள்ள முடியவில்லையா?
வந்து...வந்து
வாயை மூடுடா... அறிவு கெட்டவனே!
அவர்களுடைய திட்டம் என்னவென்று இப்போது நமக்கு ஓரளவு விளங்கி விட்டது... ஓடிச் சென்று பீரங்கி படையினரை விரைந்து வருமாறு கூறு!
யெஸ்.. கர்னல்!



ங்கே—
இந்த மாதிரியா...?
இதே மாதிரி அமைப்புக்களை நிறைய சுற்றி வட்டமாக அமையுங்கள்... தீ மூட்ட விறகு கட்டைகளுக்கும் ஏற்பாடு செய்யுங்கள்!
மாம்...! அவர்களை ஏமாற்ற ந்த ஏற்பாடு போதும்!
இதையடுத்து நதி அருகே நகர்த்தி நிலைப் படுத்தப் பட்ட பாறைகளின் பின்னே பதுங்கி காத்து நின்ற மற்ற வீரர்களிடம் சென்றான் டெல்காடோ-
ியன் மறையப் போகிறது! வெள்ளையர்கள் எந்த நிமிடமும் ங்கே வந்து சேரக்கூடும்!
ஆமாம்!
டெக்ஸ் வில்லரின் ணையை மறந்து விடலாகாது...!
வெள்ளையர்கள் நதியை கடக்க முற்பட்டால்...?
திறமையாக வேட்டையாடுவதிலும், போரிடுவதிலும் வல்லவர்கள் அல்லவா நீங்கள் அனைவரும்!



எதிரிகள் அற்றினுள் இறங்கியதும் அவர்களுடைய குதிரைகளை குறி வைத்து சுட்டு வீழ்த்த தவறினீர்களோ பின்னர் உங்கள் உயிர் உங்களுக்குச் சொந்தமாக இராது— ஜாக்கிரதை!
நாளை காலை சூரிய உதயத்தை பார்க்க விரும்பினால் டெக்ஸின் ஆணை எப்போதும் நினைவிலிருக்கட்டும்!
அப்போது மலை முகட்டில் கண்காணிப்பாக நின்று கொண்டிருந்த வீரன் உரத்து குரல் கொடுத்தான்!
படை வந்து விட்டது!
அவரவர் நிலைக்கு செல்லுங்கள்!
அதோ... அதுதான் பாழடைந்த கிராமம் எனப்படுவது!
உடனே தாக்கப் போகிறோமா...?



இல்லை— முதலில் பீரங்கிகள் முழங்கும்!
நாம் இன்னும் சற்று நெருங்கியதும், ஒரு பிரிவினரை முன்னால் அனுப்பி நிலைமையை தெரிந்து கொண்டு வர உத்தரவிடு ..
அப்படியே—கர்னல்!
தினைந்து நிமிடங்-
ளுக்குப் பின்—
எங்களுக்கு ஆபத்து வரும் போலிருந்தால் பின்னாலிருந்து பாதுகாப்பாக துப்பாக்கியை இயக்குங்கள்!
முன்னேறுங்கள்...!
னால் அந்த வினாடியே—
டுமீல்!
ஹீ! ஹீ! ஹீ! ஹீ!
ஐ...யோ!
பாறைகளின் பின்னாலிருந்து சுடுகிறார்கள்!


டுமீல்!
டுமீல்!
ஹி! ஹி! ஹி!
தொலைந்தோம்!
எல்லோரும் அந்த பாறைகளை குறி வைத்து சுடுங்கள்!
ஹி! ஹி! ஹி!
டுமீல்!
டுமீல்!
சரமாரியாக சுட்ட போதிலும் பலன் ஏதும் இருக்க வில்லை...



மாறாக தங்களுடைய குதிரைகளை
)ழந்ததுதான் அவர்கள் கண்ட பலன்!
பின் வாங்குங்கள்—அனைவரும்!
அங்கே என்னதான் நடக்கிறது?
வேவு பார்க்கச் சென்ற படைப்பிரிவுனரிடையே குழப்பம் ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறது!
ஆற்றின் மறு கரையில் பாறைகளின் பின்னே பதுங்கிக் கொண்டு எதிரிகள் இக்கரையின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்
ஓகோ!
ூரியன் மறைந்து கொண்டிருக்கிறது—
டனே தாக்குவதற்கு நீங்கள்
த்தரவிட்டால்—
இல்லை!
இழப்பின்றி சாதிக்க வேண்டிய வெற்றியை அதிகமாக பலி கொடுத்து சாதிப்பது முட்டாள்தனம்!



நாம் சற்று பாதுகாப்பான தொலைவிலேயே முகாமிட்டு காத்திருப்போம்... விடிகாலையில் நம்முடைய பீரங்கிகள் அந்த அயோக்கியர்கள் தங்கியிருக்கும் குடிசைகளை அழித்து தரைமட்ட மாக்கிய பின் நாம் தாக்கத் தொடங்குவோம்.
அதற்கிடையே யாரையாவது அனுப்பி நார்ட்டனை உடனே திரும்பி வரச் சொல்!
உத்தரவு...கர்னல்!
ஆனால் 15 நிமிடங்களுக்குப்பின்— வீரர்கள் தீ மூட்டத் தொடங்கிய வேளையில்...
ஹே...! அங்கே பார்!
?
சார்ஜண்ட் ப்ராட்லி தன் பீரங்கிப்படை வீரர்களுடன்...!
பீரங்கி வண்டிகளை காணோமே?


சார்ஜண்ட் ப்ராட்லி ரிப்போர்ட்டிங்...!
எதிரிகள் சதி செய்துவிட்டனர்— வண்டிகளை கைவிட்டு தப்பியோடி வரவேண்டிய நிர்ப்பந்தம்!
பீரங்கி வண்டிகள் என்னவாயின?
போதும்— நிறுத்தடா... இடியட்!
உன்னை இக்கணமே சுட்டு வீழ்த்த சட்டம் இடம் கொடுக்கவில்லை... நீ கைது செய்யப்பட்டிருக்கிறாய்!
காப்டன் க்ராஞ்சர்— உடனே வீரர்களுடன் சென்று எப்பாடுபட்டேனும் பீரங்கி வண்டிகளை மீட்டு வா...! எந்தக் காரணத்தைக் கொண்டும் வெறுங்கையோடு திரும்பி வராதே— புரிகிறதா?
புரிகிறது—கர்னல்!
கொஞ்சம் கொஞ்சமாக இருட்டிக் கொண்டு வந்தது பாறை மேட்டிலும், படைப்பிரிவு தங்கியிருந்த முகாமிலும் தீ மூட்டப்பட்டிருந்தது.



இரண்டுமணி நேரம் கழித்து—
இதுதான் தருணம்—மெள்ள நழுவி விட வேண்டும்... ஒவ்-வொருவராக!
ஆகட்டும்
சில நிமிட இடைவெளி விட்டு டெல்கா டோவின் வீரர்கள் ஒவ்வொருவராக அங்கிருந்து இரகசியமாக நழுவி மறைந்தனர்...
தவழ்ந்து...ஊர்ந்து ஓசை எழுப்பாமல் ஆற்றை நெருங்கி நீரினுள் நழுவி நீரோட்டத்தோடு போனார்கள்...
அவர்கள் அனைவரும் முதலில் குதிரைகளோடு கிளம்பிச் சென்ற இரண்டு வீரர்கள் காத்திருந்த இடத்தை சுமார் 2 மணி நேரம் கழித்து சென்றடைந்தனர்...
எல்லோரும் வந்து விட்டார்களா?
வந்தாயிற்று!
வாருங்கள் போகலாம்! விரைந்து சென்று விடியுமுன் நாம் டெக்ஸ் வில்லரோடு சேர்ந்து கொண்டு விட வேண்டும்!



அதே வேளையில்— அங்கே...
அதோ இருக்கிறது ஹாரிஸ் கோட்டை...!
உடனடியாக நாம் செயல்பட வேண்டும்!
ஆம்... கால விரயம் வெற்றியை பாதிக்கும்!
எத்தனை சீக்கிரம் அந்த அப்பாவிகளை தட்டி எழுப்புகிறோமா அத்தனை நல்லது!
ஆமாம்!
எனவே, சில நிமிடங்களுக்குப்பின்—
தொலைந்தோம்!... செவ்விந்தியர்கள்!
உடனடியாக எல்லோரையும் உஷார்படுத்தவேண்டும்!


அபாய எச்சரிக்கை !
ஓடி வாருங்கள்—
சீக்கிரம்!
ஊஹூம்... அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியாது!
காற்று சாதகமாக வீசியதால் தீ நன்றாக பற்றிக் கொண்டு உக்கிரமாக எரியலாயிற்று.
பின் வாங்கு...!
விலகு!



F-4


லூயிஸ் கோட்டை-யின் சரித்திரம் முடிந்தது!
உள்ளே இருக்கும் வீரர்களுக்கு மரண பயம் ஏற்பட்டிருக்கும்!
விடிவதற்குள் கோட்டை தரை மட்டமாகிவிடும்!
உள்ளிருப்போர் திருப்பி தாக்க முற்-படுவார்களா?
மாட்டார்கள்- அதுவும் இந்த இராப் பொழுதில்!
உள்ளே—
என்ன செய்யலாம் லெப்டினென்ட்!
டெப்போக்களுக்கும் தீ வைத்து விட்டார்கள்!
செய்வதற்கு ஒன்றுமேயில்லை.
விடியும் வரை நாம் செய்யக் கூடியது ஏதுமில்லை.
நம்மை அவர்கள் தாக்கினால்?
... அதுவல்ல அவர்கள் நோக்கம்!


கோட்டையை அழிப்பதுதான் அவர்-களுடைய திட்டம்... நம்மை தாக்குவதாக இருந்தாலும் விடிந்த பின்னரே அந்த முயற்சியை மேற்கொள்வார்கள்!
ஆக இப்போது நாம் செய்யக்கூடியது ஒன்று உண்டென்றால் தீ அதிகம் பரவாமல் தடுப்பது தான் — குதிரைகளை ஆபத்தான நிலையில் பக்கத்தி-லேயோ வைத்துக் கொள்வது உசிதம்!
இதற்கிடையே தீ அம்புகள் நிறைய எண்ணிக்கையில் தொடர்ந்து வந்து விழுந்து கொண்டேயிருந்தன...!
சில மணி நேரத்தில் விடிந்துவிடும்— அதன் பின்னரே நாம் ஏதாவது உருப் படியாக செய்யமுடியும்!
இலக்கின்றி சுட்டு தோட்டாக்களை வீணடிப்பது மதியீனம் என்பதை புரிந்து கொண்டு விட்ட வீரர்கள் கூடியவரை தீயின் பிடியிலிருந்து கோட்டையை காப்பாற்றும் முயற்சியில் இறங்கினர்.
குதிரைகளை அப்பால் கொண்டு போ...!


கோட்டையை அழிப்பதுதான் அவர்- களுடைய திட்டம்... நம்மை தாக்குவதாக இருந்தாலும் விடிந்த பின்னரே அந்த முயற்சியை மேற்கொள்வார்கள்!
...ஆக இப்போது நாம் செய்யக்கூடியது ஒன்று உண்டென்ருல் தீ அதிகம் பரவாமல் தடுப்பது தான் — குதிரைகளை ஆபத்தான நிலையில் பக்கத்தி-லேயே வைத்துக் கொள்வது உசிதம்!
இதற்கிடையே தீ அம்புகள் நிறைய எண்ணிக்கையில் தொடர்ந்து வந்து விழுந்து கொண்டேயிருந்தன...!
சில மணி நேரத்தில் விடிந்துவிடும்— அதன் பின்னரே நாம் ஏதாவது உருப் படியாக செய்யமுடியும்!
இலக்கின்றி சுட்டு தோட்டாக்களை வீணடிப்பது மதியீனம் என்பதை புரிந்து கொண்டு விட்ட வீரர்கள் கூடியவரை தீயின் பிடியிலிருந்து கோட்டையை காப்பாற்றும் முயற்சியில் இறங்கினர்.
குதிரைகளை அப்பால் கொண்டு போ...!



வீரர்களை பின் வாங்க இனி நீ உத்தர விடலாம்... தீ அணையாமல் மீதமிருப்பவைகளை எரித்து அழிக்க காற்று பொறுப் பேற்றுக் கொண்டார்!
இரவுமுழுவதும் தீப்பிளம்புகள் வானோக்கி எழுந்த வண்ண மிருந்தன...
கிழக்கு வெளுக்கத் தொடங்கியதும் இதுவரை அச்சத்-தாலும் கடுமையான முயற்சிகளாலும் களைத்து சோர்ந்து போயிருந்த அமெரிக்க படை வீரர்கள் எப்படியாவது நழுவி தப்பிபோடிவிடவேண்டு மென்று கோட்டையை விட்டு வெளியே வந்தபோது கீழ்வானில் கறுப்பாக ஏதோ கோடிட்டு நின்றது .. நூற்றுக் கணக்கான செவ்-விந்தியர்கள் தங்கள் ஜாதிகுதிரைகளின் மீது அசைவற்று இருந்த அணி வகுப்பே அது!
அடக் கடவுளே
தொலைந்-தோம்!
எச்சரிக்கை...! அவர்கள் நம்மை தாக்கக்கூடும்!
இல்லை— ஒருவர் மட்டும் நம்மை நோக்கி முன்னேறி வருகிறார்!
அவர் கையில் சமாதானக் கொடி இருக்கிறது!


அதையடுத்து—
எத்தனை மண்டை ஓடுகளை பொறுக்கிச் செல்லலாம் என்று கணிக்க வந்தாயா?
இல்லை— ஒரு துப்பாக்கி கூட முழங்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளவே வந்தேன்!
இத்தனை குழப்பங்களுக்கும் காரணம் அந்த மதிகெட்ட கர்னல்தான் என்று நான் புரிந்து கொண்டிருக்கும் விஷயம் உனக்கும் தெரியும்...
எனவே, நீயும் உன் வீரர்களும் அநியாயமாக மேலும் இரத்தம் சிந்தாமல் தவிர்க்க துணைபுரிய வேண்டும்!
நிபந்தனையின்றி நாங்கள் சரணடைய கோருகிறாயா?
சிதிலமடைந்த இந்தக் கோட்டையை விட்டு உடனடியாக நீங்கள் அனைவரும் வெளியேறி கார்லண்டு கோட்டைக்கு செல்லவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் உங்களுக்கு உயிர்ப்பிச்சையளிக்கத் தயார்... உங்களுடைய துப்பாக்கிகள் உங்கள் வசமே இருக்கும்— டைகர் உங்களுக்கு துணை வருவான்.!
ஆமாம்...! இந்த நிலையில் நாம் மோதிக் கொண்டோமேயானால் உங்களுக்கு அழிவு நிச்சயம் — எங்களுக்கு சிறிதளவு புகழ் வந்து சேரும்... இது உறுதி!


வேறு ஏதாவது உண்டா?
...கர்னல் ஆர்லிங்டனை இராணுவ நீதி மன்றம் விசாரிக்கும் போது நடந்த உண்மைகளை உள்ளபடி எடுத்துரைக்கும் பொறுப்பை உன் மனச்சாட்சியிடமே விட்டு விடுகிறேன்...!
வேறு எதுமில்லே லெப்டினென்ட்!
சுத்த வீரனை வாக்கை காப்பாற்று-வேன்... வில்லர்!
நன்றி... லெப்டினென்ட்!
அங்கே—
அது எப்படி சாத்தியம்?
சுமார் 15 பேர் மட்டுமே, அடங்கி வரும் தீயை சுற்றி அரைத் தூக்கத்தில் ஆழ்ந்து கிடப்பதாக தெரிகிறது— மற்றவர்கள் யாரும் தென்படக்காணோம்!
ஆமாம்—ஏன் ஆசாமி இன்னமும் திரும்பி வரவில்லே?
அதோ— தொலேவில் வந்து கொண்டிருப்பது அவர்தான் என்று நினைக்கிறேன்!
காப்டன் க்ராஞ்சர் மட்டும் இப்போது பீரங்கி வண்டி-களுடன் திரும்பி வந்தார் என்றால்...



ஆமாம்... க்ராஞ்சர் தான்— ஆனால் ஒரு பீரங்கி வண்டியும் தென்படவில்லையே!
சில நிமிடங்களுக்குப் பின்...
என்ன ஆயிற்று?
பீரங்கி வண்டிகளை மீட்டு விட்டோம்... கர்னல்! ஆனால் அவற்றால் நமக்கு எந்தப் பயனும் இராது!
சைலன்ஸ்.. !
நீ இப்போது செய்யக்கூடியது ஒன்று உண்டு என்றால் அது உன் வீரர்களை தலைமைதாங்கி நடத்திச் சென்று அங்கே மேட்டுப் பகுதியில் பதுங்கிக்கிடக்கும் கும்பலை தாக்குவதுதான்! உடனே புறப்படு . !



உத்தரவு .. கர்னல்!
வடிகட்டின முட்டாள்!
உன் வீரர்களையும் தயார் நிலையில் நிறுத்து காப்டன் நார்ட்டன்! முதல் தாக்குதலுக்கும் இரண்டாவது தாக்குதலுக்கும் இடையில் ஒரு சில நிமிட கால இடைவெளி மட்டுமே இருக்க வேண்டும்!
உத்தரவு . கர்னல்!
குதிரைகள் நிதானமாக மூச்சு விடக்கூட ஓய்வு கொடுக்காமல் தாக்குமாறு எங்களுக்கு உத்தர விடுகிறானே!
வீரர்களே... புறப்படுங்கள்!
பாறைகளின் பின்னே இருந்து எதிர்ப்பு வரக்கூடும்— எச்சரிக்கை!
ஆச்சரியமாக இருக்கிறது— எந்த எதிர்ப்பையும் காணோமே!
ஏதாவது சூழ்ச்சியாக இருக்கக்கூடும்!


க்ராஞ்சரின் பிரிவு ஆற்றைக் கடந்து கரையேறியதும் நார்ட்டனின் பிரிவு ஆற்றில் இறங்கியது. அனைவரும் மிகுந்த எச்சரிக்கையோடு துப்பாக்கி விசையில் விரல் தயார் நிலையில் இருக்க பதுங்கி பதுங்கி முன்னேறினர்.
விரைவிலேயே உண்மை வெட்ட வெளிச்சமாகியது...
பித்தலாட்டம்!
போர்வைகளின் உள்ளே கற்பாறைகள் தான் இருக்கின்றன ..
?
!
சே... வெட்-கக்கேடு!
குடிசைகளினுள்ளே புகுந்து அழியுங்கள்— ஆனால் உள்ளேயும் செவ்விந்தியன் எவனும் இருக்கப் போவதில்லை என்பது நிச்சயம்!


அங்கே என்னதான் நடக்கிறது... செவ்விந்தியன் எவனும் கண்ணில் படக் காணோமே!
10 நிமிடங்களுக்குப் பின் —
வெகு நேரத்திற்கு முன்பே எதிரிகள் இடத்தை காலி செய்து விட்டு ஓடிப்போய் விட்டதாக தெரிகிறது...!
எந்த திசையில், போனார்கள் என்று தெரிகிறதா?
திட்டவட்டமாக எதையுமே தெரிந்து கொள்ள முடியவில்லை.
இரவிலேயே ஆற்றினுள் இறங்கி நீரோட்டத்தோடு போயிருக்கக்கூடும்...
பின்னே — தடையமின்றி பறந்தோடிப் போய் விட்டார்களா?
அவர்கள் தலையில் இடி விழ!
ஏறுங்கள் குதிரையின் மீது! இந்த பிராந்தியம் முழுவதும் வலை போட்டு தேடுங்கள் — அவர்கள் மட்டும் என்னிடம் அகப்படட்டும் ... நசுக்கி விடுகிறேன் நசுக்கி!



கர்னல் அர்லிங்டன் ஏதோ பெரிய யுத்தத்தில் ஈடுபட்டிருப்பது போல் தடபுடல் பண்ணிய போதிலும் உருப்படியாக எதுவுமே சம்பவிக்க வில்லை! சற்றைக்கெல்லாம் தொலைவில் புகை சமிக்ஞை வானுயர எழுந்தது!
செவ்விந்திய வீரர்கள் கோட்டையை சூழ்ந்து கொண்டு விட்டனர்!
அதில் அடங்கியிருந்த செய்தி அமெரிக்க படை வீரர்களை அதிரடித்தது...!
கர்னல்... அவர்கள் கோட்டையை தாக்க முற்பட்டால்...?
மூடுவாயை! எப்படி போரிடவேண்டுமென்று எனக்கே சொல்லித்தர நினைக்கிறாயா...?
விரைந்து செல்வோம்... வாருங்கள்!
இந்த தடவை அந்த சொறி நாய்கள் தப்பிக்கவே முடியாது!
நீண்ட பயணத் திற்குப் பின் லூயிஸ் கோட்டை-யை அவர்கள் வந்தடைந்த போது —
என்ன இது— அநியாயம்!
தரைமட்டமாக்கப்பட்டு அலங்கோல மாக காட்சியளிக்கிறதே?


சைத்தான்கள்...!
பேசாதே... காப்டன்! நடந்தவைகளை எண்ணி இப்போது புலம்புவதில் பயனில்லை...! இறந்தவர்களை புதைத்து விட்டு உடனே பழி வாங்க செல்ல வேண்டும் நாம்!
கோட்டைக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யாதது தவறு!
அந்த நாய்களின் கிராமங்கள் எங்கே இருக்கின்றன என்று நமக்குத் தெரியும் .. போய் ஒவ்வொரு கிராமமாக தாக்கி அழிப்போம்!
சரியான மாங்காய் மடையன்
சிறிது நேரம் கழித்து...
ஆனாலும் நிஜம் இது தான்... கர்னல்!
இது சாத்தியமே இல்லை
பின்னே .. இங்கிருந்த நம் வீரர்களின் கதி என்ன?
செவ்விந்தியர்கள் தங்கள் இனத்தவரின் பிணங்களை புதைப்பார்களேயன்றி தங்களுடைய எதிரிகளின் பிணத்தின் மீது அக்கறை காட்டமாட்டார்கள்?
கண்காணிப்பு பிரிவு தலைவர் சார்ஜண்ட் ஒபரா ஏதேனும் விளக்கம் தரக்கூடும்.


அதோ திரும்பி வருகிறுர் ஒபரா...
இரு நிமிடங்களுக்குப் பின்—
என்னசேதி?
சண்டை எதும் நிகழவே இல்லே... இங்கிருந்த வீரர்கள் கீழ்த்திசை நோக்கி பயணமானுர்கள்.
அவர்கள் கார்லண்டு கோட்டைக்கு செல்ல, அதற்கு 100 அடி முன்னதாகநின்று விட்ட செவ்விந்தியகூட்டம் நியூ மெக்ஸிகோ... எல்லேயை நோக்கி நகர்ந்தது
இந்த செய்தி நம்பகமானது தானு?
நூற்றுக்கு நூறு...!
இன்னென்றும் சொல்ல வேண்டும் .. செவ்விந்தியர்கள் பெருத்த எண்ணிக்கையில்— ம்.. சுமார் ஓர் ஆயிரத்துக்கு குறையாமல்— இருந்தனர்...
அவர்கள் நாசமாகப் போக!


அந்த பன்றிகள் கோட்டையிலிருந்த வீரர்களை சரணடையச் செய்திருக்க வேண்டும்... என்னை வென்று விட்டதாக மனப்பால் குடித்தார்களேயானால் அதற்காக அவர்கள் விரைவிலேயே பெரிதும் வருந்தப்போவது உறுதி !
அந்த சைத்தான்களின் இரத்தத்தால் இழுக்கை கழுவி பெருமையை மீண்டும் நிலை நாட்டும் வரை நான் ஓயப் போவதில்லை— குதிரையிலேறி புறப்படுங்கள் அனைவரும்!
வந்து...
பேசாதே!
எல்லாம் ஒரு முடிவுக்கு வந்தபின் இராணுவ நீதி மன்றத்தில் சிலருக்கு கடும் தண்டனை கிடைக்கப் போவது. உறுதி அவர்களிடையே நீங்களும் இருக்க இஷ்டமா?
கிறுக்குப் பயல்!
அதே நாளில் கார்லண்டு கோட்டையில்—
... ஹாரிஸ் கோட்டை முழுவதுமாக எரிந்து போய் விட்டதாக்கும்...!
ஆமாம் ஸார்!
ஓகோ!
HEADQUARTERS
விடியும் வேளையில் தீயினால் உருக்குலைந்து போன கோட்டையினுள்ளே மாட்டிக் கொண்டிருந்த எங்களைச் சுற்றிலும் செவ்-விந்தியர்கள் முற்றுகையிட்டு நின்றனர்.



லூயிஸ் கோட்டை பொறுப்பற்ற ஓர் அதிகாரியின் வசம் ஒப்படைக்கப் பட்டி-ருந்த உண்மை இப்போதாவது உங்களுக்கு தெளிவாகி விட்டதல்லவா!
தெளிவான சிந்தனை இல்லாததால் ஆத்திரத்தில் அறிவிழந்து பீரங்கி படைகளை இழந்ததோடு லூயிஸ் கோட்டை முழுவதுமாக நாச மாகவும் காரணமாகி விட்டிருக்கிறான்.
போதும்... கார்ஸன்!
மேலும் மேலும் முட்டாள்தனமான காரியங்களை செய்து நாட்டில் இரத்த ஆறு ஓட அவன் காரணமாகிவிடும்முன் அவனை தடுத்து நிறுத்தியாக வேண்டும்!
செவ்விந்தியர்களின் புனர்வாழ்வுக்காக அரசு என்னென்னவோ முன்னேற்ற திட்டங்களை செயல்படுத்த முனைந்தி-ருக்கும் இந்த கால கட்டத்தில்...
...செவ்விந்தியர்களை சீண்டி விட்டு ஒரு புரட்சிக்கு வழி வகுக்கப்பட்டு விட்டால்...
...அப்படி யொரு அசம்பாவிதம் நிகழ்ந்து விடாமல் தடுத்து நிறுத்தி விடலாம்... ஜெனரல்!


நிலைமை இன்னமும் டெக்ஸ் வில்லரின் கட்டுப் பாட்டுக்குள்தான் இருக்கிறது — ஒரு சொட்டு மனித இரத்தம் கூட சிந்தாது என்று அவர் கொடுத்த வாக்கை நிச்சயம் காப்பாற்றுவார்... அதற்கு கர்னல் அர்லிங்டனை பதவி இறக்கம் செய்ததாக நீங்கள் ஒரு உத்தரவு பிறப் பித்தால் போதுமானது.
ம்ம்...!
வேறு வழிவகை ஏதும் இல்லை... ஜெனரல்!
உடனடியாக தற்காலிக பதவி நீக்கம் செய்து இராணுவ நீதி விசாரணைக்கு உத்தரவிடு-கிறேன் — சரிதானே?
உத்தரவு... ஜெனரல்!
கர்னலின் சீருடையை அணிய கொஞ்சமும் தகுதி-யற்ற அந்த உதவாக்கரையிடம் என் உத்தரவை கொண்டு சேர்க்கும் பொறுப்பை உன்னிடமே ஒப்படைக்கிறேன் லெப்டினென்ட்...!
பதினைந்து நிமிடங்களுக்குப் பின் கார்ஸன், டைகர் கிட் துணைவர தலைமையகத்தை விட்டு புறப்பட்டார் அந்த லெப்டினென்ட்.
நில்லுங்கள்!
அதே நாளில் சூரிய அஸ்தமனத்துக்கு சற்று முன்னதாக...


ஏன்?
மூன்று முக்கிய காரணங்களுக்காக...!
ஒன்று— குதிரைகளுக்கு சற்று ஓய்வு — கொடுக்க ...இரண்டு— புகை சமிக்ஞை மூலம் சில செய்திகளை அனுப்ப!
மூன்றாவது?
நமக்கும் கொஞ்சம் காபி தயாரிக்க...!
தாமதமின்றி புகை சமிக்ஞைகள் வானுற எழும்பின...
சிறிது நேரம் கழித்து—
என் திட்டம் வெற்றி பெற்று விட்டது— அங்கே கவனி!
லூயிஸ் கோட்டையின் பொறுப்பதிகாரி கர்னல் அர்லிடனின் செயலை இராணுவ தலைமையகம் வன்மையாக கண்டனம் செய்கிறது!


தடத்தை பின் பற்றி கார்லண்டு
கோட்டையை நோக்கி
வரவும் கார்ஸன்!
அதாவது கார்ஸனும் மற்றவர்களும் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்-கிறுர்கள் என்றுகிறது... விஷ்...ஷ்!
அதே சமயம்...
கெட்ட செய்தியா?
கார்ஸனிடமிருந்து வெளியான செய்தியின்படி நமது கர்னல் தண்டிக்கப்பட்டிருக்கிறுர்... கார்லண்டு கோட்டையை நோக்கி நாம் அனைவரும் வருமாறு உத்தரவிடப் பட்டிருக்கிறது!
நல்ல சேதிதான்... காப்டன்!
கவனமாக கேட்டுக்கொள்— உடனே கர்னலிடம் ஓடிச் சென்று செவ்விந்தியர்கள் கார்லண்டு கோட்டையை நோக்கி செல்லும் வழியில் முகாமிட திட்டமிட்டிருப்பதாக புகை சமிக்ஞை செய்தி தெரிவிக்கிறது என்று சொல்!
நம் அவஸ்தைகளுக்கு ஒருவழியாக முடிவு ஏற்பட்டிருக்கிறது சார்ஜண்ட்!
செய்தியை நான கர்னலுக்கு தெரிவிக்க வேண்டுமா?
உத்தரவு... காப்டன்!


அதன் படி —மறு நாள்...
அதோ... அங்கே இருக்கிறார்கள்!
தாக்குவதற்கு அனைத்தும் தயார்தானே?
இல்லை— கர்னல் அர்லிங்டன்...!
நம்மை சந்திக்க அங்கே வருவது யார் என்று கவனித்துப்பாருங்கள்
?
அறிவு கெட்டவனே! கர்னல் போன்ற உயர் பதவியில் இருப்பவரை விளிக்கும் போது பதவி-யை- சேர்த்துச் சொல்ல வேண்டும் தெரியுமல்லவா?
லெப்டினென்ட்... என்ன சேதி?
ஜெனரல் டென்வரிட-மிருந்து உத்தரவு!


உத்தரவை பிரித்து படித்துப் பார் — உண்மை விளங்கும்!
உன் மண்டைக்குள்ளே இருந்து ஆட்டி வைக்கும் சைத்தானுக்கு மரண அடி விழுந்திருக்கிறதை புரிந்து கொள்வாய் ...தோட்டாவை விட சிறு காகிதம் எத்தனை பயங்கரமானது என்பதும் தெரியவரும்!
இது நடந்து ஆறு மாதங்களுக்குப் பின்— ஒரு காலத்தில் கர்னலாக இருந்த அந்த நபர், கசப்பான தன் கடந்த காலத்தை மறக்க மதுவின் துணையை நாடி மனம் சோர்ந்து தளர்ந்து தள்ளாடிய நிலையில், டூரங்கோவிலிருந்து ப்ளாடா செல்லவிருந்த கோச்சு வண்டியில் ஏறினார்.. !
இன்னும் வேகமாகப் போ... மிஸ்டர் — ஏற்கனவே தாமதமாகி விட்டது!
இதோ...!
ஆனால் அந்நாளில் அவரால் காயம் பட்ட நெஞ்சங்களில் இன்னும் ரணம் ஆறவில்லை என்பதையோ, தன் நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப் பட்டு வருவதையோ அறிய மாட்டார்...
ம்... வா போகலாம்!
118


அரை மணி நேரம் கழித்து—
யுடே இனத்தவரை அழித்த கொலைகாரன்
கோச்சு வண்டியில் வருகிறுன்...
அமார்கோ கணவாய் வழியாக அந்த கோச்சு வண்டி செல்லும்...!
செய்தியை உடனே தெரிவிக்க வேண்டும் —வா போகலாம்!
பிற்பகல் வேளையில் கோச்சு வண்டி அமார்கோ கணவாய் நெருங்கியபோது—
...பாதையில் தடை!
எந்த போக்கிரியின் வேலை இது?
சுடத் தேவை-யில்லை!
எல்லோரும் கையை தூக்குங்கள்!
அர்லிங்டன் என்ற நபர் உடனே வண்டியை விட்டு வெளியேறி வர வேண்டும்...
திருட்டுப் பயல்கள்? ஹோ...!



என்னிடமுள்ள பணம் தான் உங்களுக்கு வேண்டும் என்ருல்...
மற்றவர்கள் பாதையை அடைத்துக் கொண்டிருக்கும் பாறைகளை நகர்த்தி அப்புறப்படுத்தி விட்டு பயணத்தை தொடரலாம்!
பேசாதே! அந்த திருப்பம் வரை நட... வாயை மூடிக்கொண்டு!
நம்பவே முடியாத விந்தை...!
சில நிமிட இடைவெளிக்குப் பின்—
நில்!
என்னிடமிருந்து என்னதான் எதிர்-பார்க்கிறீர்கள் என்று இப்போதாவது சொல்லித் தொலையுங்களேன்!
உடனே, அந்த நபர்கள் தங்கள் முகத்தை மூடியிருந்த துணியை அகற்றிய தோடு தொப்பியையும் தூர எறிந்தார்கள்...
செவ்விந்தியர்கள்!
ஐயோ!!
அற்ப புழுக்களே— நீங்களா இப்படி அட்டகாசம் செய்கி— அஹ்!



அவர்கள் ஒரேயடியாக அவனை கொன்று தீர்த்து விடக் கூடாது!
இத்தோடு எங்களுடைய பங்குப் பணி முடிந்தது... ரெட் கிளவுடுக்கு நாங்கள் கொடுத்த வாக்கை காப்பாற்றி விட்டோம்!
கவலைப்படாதே... நஸியா!
சில நிமிடங்களுக்குப் பின்—
மாறுவேடத்துக்கு தாங்கள் பயன் படுத்திய உடுப்புகளை எரித்து விட்டு ரெட்-கிளவுடின் மகளுக்கு கூடுதலாக ஒரு குதிரையையும் கொடுத்து விட்டு அந்த செவ்விந்திய வீரர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்...
நஸியாவும் கிளம்ப ஆயத்தமானாள்...


ஆ ஆ ஆ ..!
ஓடு...!
பிசாசே— நிறுத்திக் கொலே!
நிறுத்து!
நிறுத்து! ஆ ஆ . வ்!
ஐயோ—
ஆவ்!
ஆஆ...!
நிறுத்து...! ஆ ஆ ஆ...!


யா ஹீ ஈ ஈ...!
ஓடு... ப்ளாங்கோ— நிற்காமல் ஓடு...!
என் கணவர் நிரந்தரமாக துயிலும் இடத்துக்கு கடைசி முறையாக நாம் இப்போது போய்க் கொண்டிருக்கிறோம்!





லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன்,
முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி - 626 123.
போன்: 1159. வெளியீடு எண்: 33. அச்சிட்டோர்:
முத்து பைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி - 626 123.


## அறிவிப்பு!

நமது இதழ்களின் விலை அவ்வப்பொழுது மாறி வருவதால், சரியான சந்தா தொகையினை நிர்ணயிப்பது கடினமாக உள்ளது, மேலும் தனிப்பிரதிகளை தபாலில் அனுப்பும் பொழுது, பெரும்பான்மையான பிரதிகள் சரிவர வாசகர்களுக்குப் போய் சேருவதில்லை. ஆகையால் இனி புதிய சந்தாக்களை ஏற்றுக் கொள்ள இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


# சுட்டிப் பயல்!




விரைவில் வருகிறது...!
சிவப்புக் கைதி!
ரூ. 5/-
கதை நம்பர் 1
லயன் காமிக்ஸ்
கோடை மலர்!
8 சூப்பர் சித்திரக் கதைகள்!
324 பக்கங்கள்!
உங்கள் அபிமான ஹீரோக்கள்!
வளவளப்பான கண்ணாடி அட்டை!
விச்சு & கிச்சு
கதை நம்பர் 2



துப்பறியும் கம்ப்யூட்டர் மர்மச் சுரங்கம்!
கதை நம்பர் 3


லாரன்ஸ் & டேவிட் தோன்றும்
கதை நம்பர் 4
எலிகள்— ஜாக்கிரதை!


ஜார்ஜ்
×
டிரேக்
கதை நம்பர் 5


கார்வினின் யாத்திரைகள்
கதை நம்பர் 6


பழிக்குப் பழி!
கதை-நம்பர் 7


நியாயக் காவலன் ஆர்ச்சி!
கதை நம்பர் 8
AR

## வாசகர் கடிதம்!

● 47-A, ஜே. கனகராஜ், தூத்துக்குடி.

''இரட்டை வேட்டையரின் சாகஸம் படுதூள். அட்டைப் படம் தூள் கத்தரித்து சுவரில் ஒட்டிவிட்டேன்.''

ஜூனியர், மினி லயன் காமிக்ஸை வரவேற்கிறேன்.

● க. பாபுயோகேஸ்வரன், நல்லப்பநாயக்கன்பட்டி.

''மீண்டும் ஹிட்லர்'' கதை சூப்பர்! படங்கள் அருமை. அடுத்து வரக் கூடிய கதைகளின் விளம்பரங்களைப் பார்க்கும்போது அவற்றைப் படிக்க வேண்டும் என்ற ஆவல், கின்னஸ் புத்தகத்தில் பேர் வாங்க வேண்டும் என்ற ஆவலையும் மிஞ்சுகிறது.

● K. ராஜா, உத்தமபாளையம்

''மீண்டும் ஹிட்லர்'' கதையில் இரட்டை வேட்டையர்கள் தப்பிக்கும் ஒவ்வொரு இடமும் தூள்! அட்டை படம் டக்கர்! ஜூனியர், மினி, வருகை பற்றிய செய்தி எங்களை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது.

● K. சேரன், மேட்டூர்.

''மீண்டும் ஹிட்லரில்'' இரட்டை வேட்டையர்களின் சாகஸம் தூள்! போனஸாக 2 – கதைகள் வேறு அற்புதம்!

● C. நடராஜன், எருக்கூர்.

இரட்டை வேட்டையரின் சாகசம் தூள்! அது மட்டும் அல்ல! ஜூனியர், மினி லயனும் கை–கோர்த்து வருகின்றனவே! அதையும் வெளியிட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியதற்கு மிக மிக நன்றி!

● S செந்தில்வேல், B. ரங்கநாதன், ஊத்துக்குளி.

''மீண்டும் ஹிட்லர்'' அட்–டைப் படம் சூப்பர்! அடுத்த மா–தத்திலிருந்து நான்கு காமிக்ஸ் வருகின்றன எனப் பார்த்ததும் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

● S. K. செல்வகணபதி, மன்னார்குடி.

ஹிட்லரை மட்டும் தப்பிக்க விட்டு விட்டது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. அட்டைப் படம் அருமை!